# பக்தி விஜயம்..



ஆவணி - புரட்டாதி
புரட்டாதி - ஐப்பசி : 2013
ரதம் : 02
வழி : 07,08

இல்லங்களில் படிக்கவேண்டிய பக்தி மலர்



கார்த்திகை வரங்கள் ..

மனம்போல வாழ பாவை நோன்பு

ராசிப்பலன்கள் ..

கேதீச்சர நாதரை வந்தடைந்த அபலை ..

அம்மனின் அபிஷேகத்தில் அர்ச்சகர் அதிர்ச்சி!

முற்றத்து மரங்களில் உங்கள் முன்னோர்கள்!

மங்கையர் கனவை மார்கழி நிறைவேற்றும்!

குளியலறையில் கங்கை வரும் நாள்!


ஒரு பூசணிப் பூ வாழ்வை மாற்றுகிறது!

உள்ளே ...
வாசிப்பு இன்பமும், ஆன்மீகமும் !

நம்நாட்டு சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராண அறிவு !
## பாலர் வகுப்புகளில் ..



இந்த காட்சி இடம் பெறும் காவியம் ராமாயணம்.
அதில் யுத்தகாண்டத்தில் இடம் பெறும் சம்பவம் இதுவாகும்.
ராமபிரான் தனது தம்பியாகிய இலட்சுமணனுடன் இலங்கை சென்று இராவணனுடன் யுத்தம் செய்கிறார்.
அச்சமயத்தில் இராவணனின் தம்பியாகிய இந்திரஜித்தும் இலட்சுமணனும் மோதுகிறார்கள்.
அப்போது இந்திரஜித் எய்த பாணத்தினால் இலட்சுமணன் அடிபட்டு விழுந்து விடுகிறார். அவரது உடலை அனுமன் தூக்கிச் சென்று ராமரிடம் ஒப்படைத்துவிட்டு அழுகிறார். அதன் பிறகு ஆஞ்சநேயராகிய அனுமன் புறப்பட்டுச் சென்று சஞ்சீவி மலையை பெயர்த்து தூக்கிவந்து இலட்சுமணனை காப்பாற்றுகிறார் ..


மாதாந்தம் ' பக்தி விஜயம்.. ' உங்களின்
வீடுதேடி வரவேண்டுமா?
சந்தாதாரர் ஆகுங்கள்!
0713861168, 0776649635
0232250071, 0774335144
இலக்கங்களில் தொடர்பு கொண்டு பதிவு செய்யுங்கள்
எஸ்.பி.முத்து - கணக்கு இல. 941641, இலங்கை வங்கியில்
சந்தாவை செலுத்தலாம்.
காசோலைகள், மணி ஓடர்கள் ஏற்கப்படுகின்றன.



இதுவரை பதிவு செய்யாமல் இருக்கும் வாசகர்கள் சந்தாதாரர் ஆகும்படி வேண்டுகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்நாளும் இன்புற்றிருக்க...



"தாயிற்
சிறந்த கோயில்
இல்லை"

# பக்தி விஜயம்..



100/=

இந்து சமூகத்தின்
ஆன்மீக எழுத்துப் பணியில் ..

இதழ் உருவாக்கம்,
கணனி வடிவமைப்பு,
நிர்வாக இயக்கம் :
*எஸ். பி. முத்து*
(பிரதம ஆசிரியர்)

அனுசரணை :
*வை. திருச்செல்வம்*


இந்த பக்திச் சஞ்சிகை
வெளிவரும் முகவரி :
555, புதுத்தெரு,
மன்னார்,
இலங்கை.

தொலைபேசி :
071- 3861168
077- 6649635
023- 2250071
077- 4335144

மின்னஞ்சல் :
nenjame @ gmail.com

சைவ அடியார்களுக்காக பல நூல்கள், சுவடிகள், சஞ்சிகைகள், இணையத் தளங்களிலிருந்து மூல விஷயங்கள் பெற்று, இலகு தமிழில் தரப்படுகின்றன. அவை என்றும் நன்றிக்குரியன..

பெரியோர்களும், சான்றோர்களும் குறை, நிறைகளை எடுத்தியம்புவதோடு, வாசகர்களும் சமயச் செய்திகள், ஆக்கங்கள், விமர்சனங்களை தந்து ஆதரிக்க வேண்டுகிறோம்..



## ஒளி வெள்ளம் பெருகட்டும் ! ..

அன்பான சிவச்செல்வர்களுக்கு வணக்கம் ..

''சமயம் என்பது 'அதிவிஷேடமான ஒரு பிரத்தியேக விஷயம்..' என்று பலரும் கருதுகிறார்களோ என்னவோ, இப்பொழுதும் அதன் அருமையை ஊட்டுவதென்பது சிரமமானதாகவே இருக்கிறது ..''

இப்படித்தான் சொல்கிறார்கள் பெரியார்கள். அவர்களின் கருத்தில் பொருளிருக்கிறது. எப்படியெனில் சமயத்தோடு சேர்ந்து வாழ்வதால் மட்டும் சமயஞானம் வந்துவிட வழி இல்லை என்பதே அந்த பொருள். உண்மைதானே!

கரும்புத்தோட்டத்தின் சொந்தக்காரர்களாக மட்டும் இருந்து பயன் என்ன! கரும்பின் சுவையை அறிந்திருப்பதன்றோ முக்கியம். ஆயிரக்கணக்கில் விளைந்த கரும்புகள் ஒவ்வொன்றும் எத்தனை சுவை! தோட்டக்காரர்கள் அறிய வேண்டுமே! ..

இந்த சஞ்சிகை அந்த சுவையை முடிந்த அளவுக்கு அறிவிக்கிறது.

கடந்த மாத இதழில் ஆரம்பிக்கப்பட்ட பிரார்த்தனைப்பகுதி பெரும் வரவேற்பைப் பெற்றது. பலரும் கசிந்துருகி ஆதரித்தார்கள். நன்றி.

இது ஏற்கனவே நமக்கு மேலிருந்து தரப்பட்ட நியதிதான். இதுபோல எத்தனையோ நல்ல விஷயங்கள் சைவத்தில் மறைந்து கிடக்கின்றன. கொஞ்சம் ஈடுபாடு காட்டினால் இன்னும் நிறையவே கிடைக்கும்.

அன்புடன் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் தந்த சமயம்!





சாஸ்திரங்கள் என்பது நம்பிக்கை மட்டுமல்ல.

அவை --

## விஞ்ஞானங்கள்!

### விரத நாட்களில் எண்ணை தேய்த்து குளிக்கக் கூடாது என்கிறது சாஸ்திரம். ஏன்?

எண்ணை தேய்த்துக் குளிப்பதென்பது நமக்கெல்லாம் முக்கியமான கடமை. அப்படியிருக்க இப்படியொரு விதிவிலக்கு ஆச்சரியம் தருகிறதல்லவா? ஆனால் அதனை விஞ்ஞான உலகம் பிரமித்து ஏற்கிறது.

எண்ணை என்பது தலையைச்சுற்றி ஒரு புகை வளையத்தை உருவாக்குவதாகும். சனிக்கிரகத்தின் சக்தி அலைகள் பூமியில் எண்ணைத் தன்மையை உயிர்ப்பிப்பதாக கூறப்பட்டது. தலையில் எண்ணை இருக்கும் தருணங்களில் கிரகங்களிலிருந்து வருகின்ற காந்த அலைகள் உடலுக்குள் நுழைவதற்கு வழியேற்படாமல் போகின்றது. விரதநாட்களில் உடல் மற்றும் மனதுக்கு தூய்மை முக்கியமானது. அந்நாட்களில் கிரகங்களிலிருந்து வருகின்ற காந்தசக்தி அலைகள் உடலுக்கு மிகவும் அவசியம்.


இந்த அலைகள் உடலுக்குள் நுழைய எண்ணை தடையாக இருப்பதாலேயே விரத நாட்களில் எண்ணை தேய்த்துக் குளிப்பதை தடை செய்கிறது இந்து சமயம்.

### வாசல் படியில் உட்காரக்கூடாது என்கிறது சாஸ்திரம். ஏன்?

நிலைப்படியிலோ, வாசற்படியிலோ அமரக்கூடாது என்பதற்கான காரணத்தை விஞ்ஞானமும் விளக்குகிறது.

'டௌசிங்ராட்' என்னும் கருவியை வாசல்படியில் பிடிக்கும்போது 'நெகடிவ் ஃபோர்சஸ்' என்ற எதிர்ச்சக்தி வெளியாவதை கண்டு பிடித்திருக்கிறார்கள். நாம் அங்கே அமரும்போது அந்த சக்தியால் தாக்கப்படுவோம். வாசலுக்கு உள்ளேயும், வெளியேயும் நின்று எதுவும் கொடுக்கக்கூடாது என்பதும் இதற்காகவே.

வாசல் நிலையில் நான்கு பக்கமும் சதுர வடிவமுள்ளதால் நெகடிவ் சக்தி வேகமாக பாய்கிறது. வாஸ்து சாஸ்திரத்தின் முக்கிய பகுதியாகிய இதனை சீன மக்களும் உணர்ந்து, தமது வாசல், ஜன்னல் நிலைகளை வேறு வடிவத்தில் அமைத்து மேல்நோக்கி உயர்த்தி வீடு கட்டுவதைப் பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குழந்தைப் பருவத்திலேயே அவனுக்கு அசுர பலம்! .. மிருகங்களின் பற்களும், தந்தங்களும் அவனது ஆபரணங்கள்! காட்டுப் பன்றிகளும், அரவங்களுமே அவனுக்கு விளையாட்டுத் தோழர்கள். வளர்ந்து வாலிபனானதும் கொடூர வேட்டுவனான்.

ஒருநாள் .. அவனுக்கோர் உறவு கிடைத்தது. உலகம் கண்டும், கேட்டும் இராத காணிக்கையை அந்த அன்புக்குக் கொடுத்தான். அது அவனால் மட்டுமே இயலும். அந்த உறவு


பரம்பொருள் என்றுகூட அவன் அறியான் ..



சூதாட்டத்தில் திரௌபதியை பணயம் வைத்து தோற்ற தருமரை அருச்சுனன் ஏசினான். பாண்டவர்களின் விதிப்படி 'மூத்தவரை எதிர்த்துப் பேசும் இளையவனுக்கு மரண தண்டனை தரவேண்டும்' என்று கூறிவிட்டான் பீமன். கிருஷ்ணர் யோசித்தார், அருச்சுனன் இல்லாவிட்டால் பாரதப்போரை யார் நடத்துவது? .. ''பீமா, தன் பெருமையை தானே சொல்லிப் புகழும்படி அருச்சுனனுக்கு கட்டளையிடு" என்றார். அவ்வாறே ஒருநாள் முழுவதும் தனது வீர பிரதாபங்களை கூறிமுடித்தான் அருச்சுனன். இது அவனுக்கு மரண தண்டனையைவிட கொடுமையாக இருந்தது.



## வகுப்பறைகளில் சமய அறிவு ..



ராமன் காட்டுக்குப் போவதென்பது உறுதியாகிவிட்டது. லட்சுமணன் ஒரு கணமும் தாமதிக்காமல் தன் தாய் சுமத்திரையிடம் ஓடினான். தானும் ராமனுடன் வனம் செல்ல அனுமதி கேட்டான்.


''நிச்சயமாக மகனே, ராமன் இருக்கும் இடம் வனமோ, எதுவோ அதுதான் உனக்கு அயோத்தி ..'' என்று கூறிவிட்டு, .. ''ஆனால், ராமனுடன் செல்லாதே!'' என்று சுமத்திரை மீண்டும் சொன்னதும் திகைத்தான் லட்சுமணன்.

''ஆமாம் லட்சுமணா, நீ ராமனுடன் சேர்ந்து செல்லும் அளவுக்கு சமமானவன் அல்ல. ராமனின் பின்னாலேயே போகவேண்டும் ..புரிந்ததா? ''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரார்த்திக்கிறோம் ..





**இந்த மாதத்தில்**
**நீங்கள் காப்பாற்றப்போவது**
**இவரை --**

அன்பான வாசகர்களே,

நமது சகோதர உறவுகளின் இன்னல்களை நீக்கவும், அவர்களுக்கு நல்ல வாழ்வு தரவும் வேண்டி உங்கள் இஷ்ட தெய்வத்திடம் பிரார்த்தித்து உதவும்படியாக கைகூப்பி வேண்டுகிறோம்.

இயலக்கூடிய அளவில் அர்ச்சனையோ, கூட்டுப்பிரார்த்தனையோ, சிலநிமிட தனி வேண்டுதலோ, உள்மன மன்றாட்டமோ செய்யலாம். உங்களால் அவர்கள் நிச்சயம் காக்கப்படுவார்கள் என்பது உறுதி.




நோயுற்றவர்களின் தகவல்கள் பெற்று, அவர்களின் நலம் வேண்டி, ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது வெள்ளிக்கிழமைகளில் ‘பக்தி விஜயம் ..’ நிறுவனம் ஆலய வழிபாடு செய்கிறது. பிரசாதமும் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது. விரும்புவோர் பெயர், நட்சத்திரத்தோடு தகவல்களை அனுப்பி வைக்கவும்.

சிறி ஐயா ..

மெலிந்த தேகம், தளர்ந்த குரல், சுவாசத்துக்கான பிரயத்னம்.

அரச மருத்துவமனை ஒன்றில் நாளாந்தம் இவரின் போராட்டம் --ஆஸ்துமாவுடன். தலையணைக்குக் கீழே மருந்து வில்லைகள், சேலைனும், ஊசியும் ஏற்றுவதற்காக நிரந்தரமாகவே கையிலே குத்தப்பட்டிருக்கின்ற ஊசிக்குழாய் என்று அவரைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது.

‘‘ முட்டு வருத்தம் தம்பி, ரொம்ப நாளா இருக்கு. ஆசுப்பத்திரியும், வீடும் எண்டு அலுத்துப்போச்சு .. டாக்குத்தர்மார் வந்து பாக்குறாங்க .. ஆனா விடுதில்ல ..” என்று அங்கலாய்க்கின்ற சிறி ஐயாவுக்கு எட்டு பிள்ளைகள் இருக்கிறார்களாம்.

வயது 76 என்றவுடன் அதிர்ச்சிதான் வந்தது. காரணம் அவரது உறுதியான உடல்! சிறந்ததோர் கடற்தொழிலாளியாக அக்காலத்தில் உழைத்திருக்கிறார். ஆயினும் இப்போது நோயில் விழுந்து தவிக்கும் அவருக்கு மனதிலும் சோகம். வறுமை, யாரும் கைகொடுக்காத நிலை, வயதான மனைவியின் அலைச்சல், பராமுகமான பிள்ளைகள் என்ற வேதனையோடு மருத்துவமனையின் படுக்கையில் துரும்பாக கிடக்கிறார்.

அவரது வருத்தமும், வறுமையும் ஓரளவு தீர்ந்தாலும்கூட கடைசிக்காலத்தை சாந்தமாகக் கழிப்பார் என்ற நம்பிக்கை தெளிவாகத் தெரிகிறது.

ஏழைக்கு மட்டுமல்ல. ஏழைக்காகக் குரல் கொடுத்தாலும் தெய்வம் வரவே செய்யும். நம்பி பிரார்த்தியுங்கள் ..

பெயர் : - எம். சிறி
நட்சத்திரம் -- தெரியாது
இராசி 150 -- தெரியாது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குகதாஸ குருக்கள்




இந்த மாதத்தில் நீங்கள் காப்பாற்றப்போவது இவரை --

சிவஸ்ரீ. க. குகதாச குருக்கள்

கணீரென்ற குரலுக்கும், கனிவான இறைசேவைக்கும் பெயர் பெற்ற குருக்கள் இவர். நித்திய கருமங்களும், அனுட்டானங்களும் நேரம் தப்பாமல் இவரிடம் நடந்தேறும். உயரப்புலம் உத்துங்க விநாயகரை அறியாதார் யாருமில்லை. அவரிடம் பக்தர்கள் பெறாத வரங்களும் இல்லை. அப்படியானவர் வீற்றிருந்து அருள்பாலிக்கும் பிரம்மாண்ட ஆலயத்தின் பிரதமகுரு இவராவார்.. இவரின் அன்றாட பூஜை நைவேத்தியங்களை பெறாமல் விநாயகப்பெருமானும், மனம் நிறையும் மந்திரங்களோடு கூடிய அர்ச்சனையை பெறாம்ல் பக்தர்களும் இருக்க மாட்டார்கள்.

ஆனால் இப்போது தெய்வத்தின் சோதனை ஆரம்பமாகியிருக்கிறது.. இறைவனுக்கும், அடியார்களுக்கும் அத்தியாவசிய உறவாக இருந்த இந்த அந்தணப்பெரியாரை தாக்கி வருகிறது ஒரு துன்பம்.

கிட்னி வருத்தம்! இரண்டு வருடங்களுக்கு முன்பாகவே இவரின் வாசல் கதவை தட்டி நுழைந்து விட்டது. வயதாகிவிட்டதால் அறுவை சிச்சை செய்ய முடியாத நிலைவேறு. பிறகென்ன. தினசரி துன்பம்தான். மருந்துகளும், பரிசோதனைகளும் என்று போகிறது வாழ்க்கை. பல நாட்கள் மருத்துவமனை வார்ட்டுகளிலேயே கழிந்து விடுகிறது. அருகிலேயே ஆலயம் இருந்தும் இவரது அன்றாட பணிகள் தடைப்பட ஆரம்பித்தன. எனினும், கடமையில் முடிந்தவரை ஈடுபட்டு வந்தவருக்கு மேலும் அதிர்ச்சி! 'டயலிசிஸ்' என்னும் செயலிழப்பு நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார். இதனால் கிழமைதோறும் இரத்தத்தை சுத்திகரிக்கும் மருத்துவம் நடக்கிறது. முழுவதுமாக இரத்தத்தை வெளியே எடுத்து சுத்திகரித்து மீண்டும் உடலில் செலுத்துகிறார்கள். தொடர்ந்து நான்கு மணித்தியாலங்கள் அசையாமல் கிடக்க வேண்டும். ஒரு வாரமும் தவறவிட முடியாது. தவறினால் பக்கவாதம் தாக்கும் அபாயம் இருக்கிறது என்று எச்சரிக்கிறார்கள் டொக்டர்கள்.


நாற்பது வருடமாக செய்து வந்த பூஜைக்கடமைகளை தொடர வேண்டும் என்ற ஏக்கமுடன் வாழ்கின்ற இவருக்கு இப்போது எழுபது வயது. சோதிப்பதும், காப்பதும் தெய்வம் என்பதால் இவருக்காக நாமும் தெய்வத்திடம் முறையிடலாம். எமது அன்றாட வழிபாட்டில் ஒருநாள் இவருக்காக பிரார்த்திக்கலாம். சிறுதுளி பெரு வெள்ளமாகி, விரைவில் இறையருள் பெற்று நலமடைவார் என்பது நிச்சயம். நம்பி பிரார்த்தியுங்கள்.

பெயர் : -- குகதாச குருக்கள், நட்சத்திரம் : -- உத்தராடம்

இவரின் இஷ்ட தெய்வங்கள் : - முருகன், விநாயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் வெற்றிகள் உங்கள் வீட்டிலேயே!



வாழ்விடத்தின் சிறப்புகளை விளக்கி பயன் தரப்போகும் தொடர் இது ..

நன்மைகளும், தீமைகளும் நீங்கள் வீடு கட்டுவதைப் பொருத்தது

மனை என்பது மனித வாழ்வில் அத்தியாவசியம் என்பதோடு, நாகரீகத்தின் தோற்றமும் ஆகிவிட்டது.

மனிதனின் அந்தஸ்தை மனையானது பாதுகாப்பது ஒருபுறமிருக்க பாதிப்புகளையும் வாழ்வில் ஏற்படுத்தி விடுகின்றன. பாதிப்புகளின் பிடிக்குள் தவிக்கும் பொழுது அதன் காரணகர்த்தா பெரும்பாலும் இல்லமே என்பதை நாம் கவனிக்கத்தவறுகிறோம்.

'இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது ..' என்பதுபோல நாகரீக மோகத்தில் முன்னேறிக்கொண்டிருக்கும் நமக்கு வாழ்விடத்தின் பாதிப்புகள் தெரிவதில்லை.

வெயிலுக்கு ஒதுங்க மரநிழல் போல் மழையில் தங்குவதற்கு கூடாரம் தேவை. இப்போது கூடாரமானது பல அடுக்குக் கோபுரங்களாகவும் மாறி வருகின்றன. வேண்டுகின்ற அற்புதங்களையும், வேண்டாத இன்னல்களையும் அதனுள்ளே காண்கிறோம். இவற்றை சோதிட ஆராய்ச்சி நிபுணர்கள் உறுதிப்படுத்தும் போதுதான் பல தெய்வ சக்திகள் புலப்படுகின்றன! ..

வீடுகள் எப்போதும் கிரகங்களின் ஆட்சியில்!

தெய்வத்தின் அருட்சக்தி இருந்தாலும், சகல ஜீவராசிகளையும் ஆட்சி செய்வது கிரகங்களே. எனவே தெய்வ வழிபாட்டோடு, பாபக்கிரகங்களின் பார்வையிலிருந்தும் விடுபடுவதே முக்கியம். அப்போதுதான் நல்வாழ்வு, அதிருஸ்டம் என்பதெல்லாம் கிடைப்பதற்கு வழி பிறக்கும். வாழும் இல்லத்தினுள்ளே வசந்தம் வரும்.

இரண்டு துருவங்களை உள்ளடக்கியதே வாழ்வு. சக்தியும், சிவனும் இணைந்தது போன்ற தத்துவம் அது.

## வாஸ்துவும், வாழ்வும் ..

சமயத்தின் வழிகாட்டிகள் ..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனையின் பொறுப்பிலேதான் நாம் ..**

செவ்வாயின் ஆதிக்கத்திற்குட்பட்ட பூமியின் மடியில் தவழும் ஜீவராசிகள் விந்தை மிகுந்தவை. நாம் வாழும் இலங்கையும் செவ்வாயின் நேரடி ஆதிக்கத்தில் இருக்கிறது. நீசத்திசைக்குட்பட்ட நிலையில் சமயக் கோட்பாட்டுடன் ஒழுகி வாழ்ந்தால் வாழ்க்கை மலரும், வசந்தம் பெருகும் என்பது கண்கூடு. இதற்கு நாம் வாழ்கின்ற மனைதான் பொறுப்பேற்கின்றது என்று புரிவீர் ..





**வரைபுகள் வீட்டைப் பாதுகாக்கின்றன ..**

ஒரு வீட்டின் அமைப்புக்கு வரைபுகள் இருக்கின்றன. நம் வாழ்வுக்கு உயிர் ஓட்டமாக அவை விளங்குகின்றன. சதுர, செவ்வக வடிவ மனை சாலச்சிறந்ததாகும். உச்சப்பகுதி உயர்ந்து, நிலப்பகுதிதாழ்ந்து இருத்தல், வீட்டின் மூலைப்பகுதி 90 பாகை நேர் கோணத்தில் இருத்தல் வேண்டும். தெருக்குத்து இருத்தல் ஆகாது.

**அமைப்புகளில் அதி கவனம் ..**

முக்கோணம், உள்வளைந்தது, வட்டம், வில்வளைவு உட்பட்ட மனை வீடு கட்ட ஆகாதாம்.

கோபுர, துலா போன்ற நிழல் ஆகாது. மரம், செடி கொடி அமைப்பு, மேடு பள்ளம் இருக்க வேண்டிய நிலை -- நெருப்பு, தண்ணீர்த்தொட்டி எனபனவற்றின் அமைப்பு, சமையலறை உட்புற அமைப்பு என்பன கட்டாயம் கவனிக்கப்பட வேண்டும். மனையை கெல்லிப்பார்த்தல், மிகவும் அவதானித்தல் நன்று.

நிலம் கீழ், நிலம் மேல் உயரத்திலுள்ள தண்ணீர் தொட்டியின் அமைப்பு, கழிவுநீர் ஓடும் அமைப்பு, அக்கினி மூலையில் வரும் தோஷம் என்பவையும் கவனித்தல் வேண்டும்.

மனைகோலும் நாள், நட்சத்திரம், அவரவர் ராசிக்கு ஏற்ப வாசல் அமைப்பு, திசைகள், உட்புற வெளிப்புற அளவுகளில் மிகவும் அவதானம் தேவை. வீட்டினுள் பொருட்கள் இருக்க வேண்டிய அமைப்பு, மாணவர்கள் படிக்கும் நிலை, ஆலோசனை செய்யும் நிலை, சாப்பிடும் நிலை, சயனிக்கும் நிலை என்பனவற்றுடன் --

செல்வம் வரும் நிலை,உத்தியோகம், அரச பதவிகள், முக்கியமாக பிள்ளைகளின் திருமண யோகம் தடைப்படுதல் என்பனவற்றுக்கெல்லாம் நாம் வாழும் வீடும், மனையும் ஒரு காரணமாகும்.

இது சம்பந்தமான விபரங்களை நீங்கள் கற்கும் படியாக இப்பகுதி தொடர்ந்து வெளிவர உள்ளது.

வாசக நேயர்கள் தொடர்ந்து வாசித்து பயன் பெறுமாறு வேண்டுகிறோம்.

## வாசகர்களுக்கோர் செய்தி: --

நன்மக்கள் வாழ்வாங்கு வாழ
உதவுகிறோம் ..

`` திருமண பந்தம் '' என்னும் இலவச சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்பு :
545, சோதிட ஆராய்ச்சி நிலையம்,
மன்னார்.
தொ. பே. இல: 071 3079336, 0232250263

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நலம் தரும் நாட்களும், விரதங்களும் ..

17 . 11. 2013 —— ஞாயிற்றுக்கிழமை
சர்வாலய தீபம், வீடுகளில் தீபம்
திருக்கார்த்திகை விரதம்,
குமாராலய தீபம்

18. 11. 2013 —— திங்கட்கிழமை
விஷ்ணு ஆலய தீபம்,
விநாயக விரதாரம்பம்

21. 11. 2013 —— வியாழக்கிழமை
சங்கடஹர சதுர்த்தி

23. 11. 2013 —— சனிக்கிழமை
பகவான் சாயிபாபா பிறந்த தினம்

25. 11. 2013 —— திங்கட்கிழமை
சோமவாரம்

26. 11. 2013 —— செவ்வாய்கிழமை
அட்டமி —— நவமி

29. 11. 2013 —— வெள்ளிக்கிழமை
ஏகாதசி விரதம்

30. 11. 2013 —— சனிக்கிழமை
சனிப்பிரதோஷ விரதம்

02. 12. 2013 —— திங்கட்கிழமை
அமாவாசை விரதம்

06. 12. 2013 —— வெள்ளிக்கிழமை
சதுர்த்தி விரதம்

08. 12. 2013 —— ஞாயிற்றுக்கிழமை
விநாயகர் ஷஷ்டி விரதம்

09. 12. 2013 —— திங்கட்கிழமை
திருவெம்பாவை பூஜை ஆரம்பம்

10. 12. 2013 —— செவ்வாய்கிழமை
அட்டமி —— நவமி

13. 12. 2013 —— வெள்ளிக்கிழமை
ஏகாதசி விரதம்

14. 12. 2013 —— சனிக்கிழமை
சனிப்பிரதோஷ விரதம்

15. 12. 2013 —— ஞாயிற்றுக்கிழமை
கார்த்திகை விரதம்

17. 12. 2013 —— செவ்வாய்கிழமை
பூரணை விரதம்

21. 12. 2013 —— சனிக்கிழமை
சங்கடஹர சதுர்த்தி விரதம்

25. 12. 2013 —— புதன்கிழமை
அட்டமி —— நவமி, அமிர்தசித்தம்

28. 12. 2013 —— சனிக்கிழமை
ஏகாதசி விரதம்

30. 12. 2013 —— திங்கட்கிழமை
பிரதோஷ விரதம்

31. 12. 2013 —— செவ்வாய்கிழமை
போதாயன அமாவாசை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் புராண அறிவு -- இல: 03 -- முடிவு



பரிசு பெறுபவர் : --
செல்வி க. அமிர்தனா,
கிளிநொச்சி மகா வித்தியாலயம்,
கிளிநொச்சி

இந்த புராண காட்சி பற்றிய விபரத்தை இம்மாணவி தனது நடையில் இவ்வாறு தருகிறார் ..

''இந்த படம் பாரதப் போர் பற்றி வியாசர் சொல்ல பிள்ளையாரப்பன் புத்தகத்தில் எழுதும் பொழுது எழுத்தாணி உடைந்து விட்டது. பிள்ளையார் தனது ஒரு கொம்பை உடைத்து, விடாமல் சொல்லும் பாரதக்கதையை எழுதி முடித்தார் ..''

**இப்போட்டியில் ஆர்வத்தோடு கலந்து கொண்ட மாணவர்களை வியந்து பாராட்டுகிறோம். அனைவருக்கும் வாழ்த்துக்கள்!**

## மாணவர் புராண அறிவு

### போட்டி இல : 05

இந்த காட்சியின் விபரத்தை சுருக்கமாக விளக்கி, எழுதி அனுப்பவும். பரிசுகள் உண்டு.


(பாடசாலை முகவரியிட்டு அனுப்பவும்.)

இயக்குனர்,
'பக்தி விஜயம் ..'
555, புதுத்தெரு,
மன்னார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொண்டாடுவதற்கு முன், ஒருநிமிடம்






தீபாவளி என்றாலே குதூகலம்தான் .. இந்த நன்னாளை எப்படியெல்லாமோ திட்டமிட்டு கொண்டாடி உறவுகளை சந்தோஸப்படுத்த ஒவ்வொருவரும் காத்திருப்பர். இந்துப் பண்டிகைகளிலேயே அதிக மகிழ்ச்சியை தருவதும் இதுவாகும். நரகாசுரனை வதம் செய்தபடியால் இந்த நாள் கொண்டாடப்பட்டு வருவது குழந்தைகளுக்குக்கூட தெரியும்.

அந்த அசுரன் கேட்டுக்கொண்டவாறே நாம் இதனை கொண்டாடினாலும், நமக்குள்ளேயும் அதன் தாக்கமும், மாற்றமும் அன்றைய தினம் நிகழ்வதை நாம் காணாமல் இருக்கிறோம். பட்டாசுச் சத்தங்களிலும், விருந்துகளிலும் நமது கவனம் சிதறிவிடுவதால் நமது உள்ளுணர்வில் நடந்துகொண்டிருக்கும் அற்புதமான ஒரு நரகாசுர நிகழ்வை அனுபவிக்காமல் இருந்துவிடுகிறோம்.

அந்த நிகழ்வு ..

மனதுக்குள் வாழும் அசுரனை மனதுக்குள் வாழும் தெய்வம் அன்று வதம் செய்யும். மனசும் பட்டாசாய் மாறி மத்தாப்புப் பூக்களாய் சிதற, அதில் அரக்க குணமும் பாவங்களும் அழிவைச் சந்திக்கும். இத்தினத்தில் இந்த மகத்தான அனுபவத்தையும் பெற்றுவிட்டால் அதுவே நிறைவான கொண்டாட்டம். தீபாவளியின் தத்துவமே இதுதானே! மனதுக்குள் இருக்கும் அசுரனை வென்று மென்மையும், மேன்மையும் பெறவேண்டிய நாளும் இதுதான் என்று நாம் ஏன் நினைக்கக் கூடாது? ..


**மனதுக்குள் வாழும் அசுரனை மனதுக்குள் வாழும் தெய்வம் வதம் செய்யும் நாள்!**



**குதூகலத்தில் கவனம் சிதறுவதால் நாம் தவற விடும் அற்புத உள்ளுணர்வுகள் ..**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மாணவர் சமய அறிவுப்போட்டி

## இல: 13

**இதுவரையில் பங்கு பற்றிய மாணவர்கள் அடுத்த இதழில் பிரசுரமாவார்கள்!**

அன்பான மாணவர்களே,

சமய அறிவை ஊட்டும் வண்ணம் இந்த 'பக்தி விஜயம்..' வெளிவருகிறது. இது உங்களுக்கும் வழிகாட்டியாக திகழ்கிறது. பரீட்சைகளில் புள்ளிகள் பெறுவதற்கு மட்டுமல்ல, வாழ்க்கையிலும் வெற்றிபெறுவதற்கு சமயத் தகவல்கள் மிக அவசியம்.

இல: 13 சமய அறிவுப்போட்டியில் பெருமளவில் நீங்கள் பங்கு பற்றியிருந்தீர்கள். அனைவரையும் பாராட்டுகிறோம் ..



**இல: 13 போட்டிக்கான விடைகள் ..**


01. ஸ்ரீமந் நாராயணன், 02. ஆறு, 03. நாவுக்கரசர்,
04. வைகை, 05. ஆடி, 06. வடம்,
07. கர்ணன், 08. முருகன் , 09.கோணேஸ்வரர் ,
10. பொங்கரவம்

| | |
|---|---|
| 1ம் பரிசு : | க. லக்ஷிகா, உடுவில் மகளிர் கல்லூரி, சுன்னாகம் |
| 2ம் பரிசு : | மோ. சேந்தன், யாழ் -- இந்து ஆரம்ப பாடசாலை |
| 3ம் பரிசு : | சி. அருள்மாறன், வட்டு இந்துக்கல்லூரி, சித்தன்கேணி |

## இம்மாத வினாக்கள் -- இல: 15

01. ''....................... இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் "
02. முருகனின் வாகனம் மயில், அதுபோல் அவரது கொடி .............. ஆகும்
03. பஞ்சபாண்டவரில் சகாதேவனுக்கு மூத்தவன் ............... ஆவான்
04. 'வைத்தியநாதன் " என்னும் பெயரை உடையவர் ........................
05. விளக்கீடு என்னும் தீபத்தை ......................... மாதத்தில் ஏற்றுவார்கள்
06. ஆலயத்தில் துவஜஸ்தம்பம் என்பது ....................... ஆகும்
07. திருஞானசம்பந்தரின் தந்தையார் ....................... ஆவார்
08. ..................... என்பவர் காளிதேவியின் அருள்பெற்ற பெருங்கவி ஆவார்
09. .................. அவதாரம் எடுத்து இரண்ணியனை மகாவிஷ்ணு கொன்றார்
10. இராவணனுடைய மகனின் பெயர் ......................... ஆகும்

சரியான விடைகளை எழுதி அனுப்புகின்ற மாணவர்கள், குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசளிக்கப்படுவார்கள்.



அனுப்பவேண்டிய முகவரி :
இயக்குனர்,
'பக்தி விஜயம் ..'
555, புதுத்தெரு,
மன்னார்.

(இப்பக்கத்தை கத்தரிக்க வேண்டாம் ..
வேறு பேப்பரிலேயே எழுதி அனுப்பவும்.)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்சிலிர்க்கும் தலங்கள்!
## வியப்பூட்டும் தெய்வங்கள்!!

ஒருநாள் வழமைபோல
கோயிலுக்கு வந்த
அர்ச்சகர்
பகவதி அம்மனுக்கான
பூஜைக்கு
ஆயத்தம் செய்தார்.
அபிஷேகத்திற்காக
அம்மன் மீதிருந்த ஆடையை
களைந்தபோது --
அதில் படிந்திருந்த கறை
அவரை அதிர்ச்சி
அடைய வைத்தது.



# பார்வதிதேவியின் பூப்புனித விழாவுக்கு போய்வர வேண்டுமோ?

செங்கண்ணூர் என்ற ஊர் அது.
அங்கே ஒரு ஆலயம்.
அந்த ஆலயத்தில் குடிகொண்டிருக்கிறாள் பகவதி அம்மன்.
உலகில் ஆலயங்களும், அம்மன் தரிசனங்களும் பக்தர்களுக்கு புதியவையல்ல. அடியவர்கள் எடுக்கும் விழாக்களும் புதுமைகளல்ல.
ஆனால் --
இந்த அம்மனுக்கோ --

உயிர்த்துடிப்பை உறையச்செய்யும் ஒரு பூஜை இங்கே நடக்கிறது. மாதந்தோறும் மூன்று நாட்களுக்கு நடத்தப்படும் அந்த உற்சவம் பெண்களுக்கு உரித்தான பூப்புனித நீராட்டு விழா!! ..

ஒருநாள் வழமைபோல கோயிலுக்கு வந்த அர்ச்சகர் பகவதி அம்மனுக்கான பூஜைக்கு ஆயத்தம் செய்தார். அபிஷேகத்திற்காக அம்மன் மீதிருந்த ஆடையை களைந்தபோது அதில் படிந்திருந்த கறை அவரை அதிர்ச்சி அடைய வைத்தது. சந்தேகம் கொண்ட அவர் அதனை மற்றவர்களிடம் காட்டியபோது முழு ஊரும் ஸ்தம்பித்து நின்றது.

நன்றி :
நீர்வை. மயூரகிரி சர்மா அவர்கள்

இது நடந்த இடம் கேரளா. இப்போதும் அங்குள்ள செங்கண்ணூர் கிராமத்தில் மாதந்தோறும் பகவதி அம்மன் மாதவிடாய் கண்டு திருப்பூத்து நிகழ்வை எய்துகிறாள். இதனால் ஒரு பெரும் அனுக்கிரகத்தையும் அன்னை வெளிப்படுத்தி வருகிறாள்.

### அம்மனுக்கு பூப்புனித நீராட்டு

அந்த ஊரின் பகவதி கோயில் தலத்தில் பார்வதிதேவி பூப்படைந்தாள் என்றும், இதையொட்டி இங்கே ருதுசாந்தி கல்யாணம் (பூப்புனித நீராட்டு விழா) நடைபெற்றது என்றும் கூறுகிறது தல புராணம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிஷேகத்திற்காக அம்மனின் வஸ்திரத்தை அர்ச்சகர் களைந்தபோது அதில் கறை படிந்திருந்ததால், சந்தேகத்தை தீர்த்துக் கொள்ள சகல வழிகளையும் மேற்கொண்டார். மருத்துவர்களும், வீட்டிலிருந்த பெண்களும் அதனை உறுதிப்படுத்தவே மேற்கொண்டு ஆகவேண்டிய காரியத்தில் இறங்கினார்.

**ஓலைப்பந்தலில் லோகநாயகி!**

முதல் காரியமாக அம்மனின் விக்கிரகத்தை எடுத்து ஆலய வளவின் வடக்கு மூலையில் ஒரு பந்தல் அமைத்து, அதில் அமர்த்தினார்.

**பூப்புனித விழா!**

பந்தலின் கருவறைக்கு வெளியே மூன்று நாட்களும் ஊர்ப்பெண்மணிகள் இரவில் காவலுக்கு இருந்தார்கள். நான்காவது நாள் அம்மனை அருகிலுள்ள பம்பா நதியின் கிளை நதியான மித்ருபுழை கடவுக்கு எடுத்துச்சென்றார்கள். அந்த நீர்நிலையில் அம்மனுக்கு எண்ணை தேய்த்து நீராட்டம் செய்து அலங்கரித்தார்கள். பின்னர் யானையின் மீது அமரச்செய்து, அழைத்து வந்து கோயிலில் சிறப்பான விழாவாக கொண்டாடினார்கள். அதன் பிறகு அந்த ஆலயத்தின் வழிபாட்டு முறைமை ஒரு புதுமையை கண்டது.

**திருப்பூத்து!**

ருதுசாந்தி வழக்கத்திற்கு ஒப்பான புனிதமான பூஜைகள் பகவதி அம்மனுக்கு தரப்பட்டன. அதுவே வழக்கமும் ஆனது. மாதந்தோறும் பகவதி அம்மன் மூன்று நாட்கள் மாதவிடாய் ஆனார். அதைத் திருப்பூத்து என அழைத்தார்கள். அந்த மூன்று நாட்களிலும் கருவறை அடைக்கப்படுகிறது. திருப்புத்தாறாட்டு என்ற அந்த விழா நாளடைவில் பெரும் உற்சவமாக மாறி புகழடைந்தது.

**சோகமும் ஆரம்பமானது ..**

ஆசாரங்களில் குறையேற்பட்டதோ என்னவோ, பின்னாட்களில் ஆலயத்தில் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் அம்மனின் சிலை சேதமடைந்தது. பதிலாக பஞ்சலோக சிலை ஒன்று உருவாக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. எனினும் அம்மனின் சக்தி குறைந்து போனது. இதனால் சிறப்புப் பூஜைகள் செய்யப்பட்டு சக்தி அதிகரிக்கப்பட்டது. இருப்பினும் பலனில்லை. மாதந்தோறும் நடைபெற்ற பூப்பு நிகழ்வின் சிறப்பு நின்றுபோனது. ஒழுங்கும், நியதிகளும் குறைந்தன.

**பேணத்தவறிய தெய்வீகம் -- வெறும் நிர்வாக கடமையாகவே மாறும் என்பதற்கு இந்த பகவதி அம்மனின் ஆலயம் ஒரு உதாரணம்**

மாத பூஜை என்ற சிறப்பு நின்றதோடு அது வருடத்திற்கு ஒருமுறை, அல்லது இருமுறை என்ற சமூக இயல்புக்கேற்ப மாற்றமடைந்தது.

இப்போதெல்லாம் முக்கிய அர்ச்சகரான மேலசாந்தி தினமும் பகவதி அம்மனின் மீதுள்ள வெள்ளைத்துணியை களைந்து கருவறைக்கு வெளியே வைத்துவிடுகிறார். ஆலயத்தில் பூமாலை தொடுக்கும் கடமையைச் செய்து வருகின்ற வாரியர் என்பவர் அந்த ஆடையை எடுத்து பார்க்கிறார். அதில் சந்தேகத்திற்குறிய கறை பட்டிருந்தால் அதனை ஆலய அலுவலகத்தில் சேர்க்கிறார்.

கோயில் நிர்வாக அதிகாரி அந்த ஆடையை தந்த்ரியின் இல்லத்திற்கும், வஞ்சிப்புழ மடத்திற்கும் அனுப்பி வைக்கிறார். அங்குள்ள வயதான பெண்மணிகள் அதைப் பார்த்துவிட்டு திருப்பூத்து ஆகியிருக்கிறது என்ற முடிவுக்கு வந்தால் அந்த ஆடையை மீண்டும் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கிறார்கள்.

அது பக்தர்களின் பார்வைக்காக மூன்று நாட்கள் வைக்கப்படுகிறது. பிறகு உற்சவ மூர்த்திக்கு வெளியிலுள்ள வடக்கு பிரகாரத்தில் தனியாக வைக்கப்பட்டு பூசை நடத்தப்படுகிறது. பகவதி திருப்பூத்து ஆகியிருக்கும் செய்தி அறிவிக்கப்பட்டவுடன் கோயிலின் கதவுகள் அடைக்கப்படும்.

இந்த மூன்று நாட்களும் தந்த்ரி ஒருவேளை மட்டும் பூஜை செய்கிறார். மூன்று நாட்களிலும் மூல விக்கிரகத்திற்கு வேறொரு துணியை அணிவிக்கிறார்கள். திருப்பூத்தின் நான்காவது நாள் ஆறாட்டுக் கடவுக்கு கொண்டு செல்லப்பட்டு, எண்ணெய்க்குளியல் செய்யப்படுகிறது. பிறகு ஊர்வலமாக அழைத்து வரப்படுகிறது.

பக்தர்கள் பார்வைக்கு வைக்கப்பட்ட திருப்பூத்து ஆடையை வேண்டி கோயிலில் முன்பதிவு செய்வோர்களும் இருக்கிறார்கள். அவர்களில் முன்னுரிமை பெறுவோர்களுக்கு அந்த ஆடை கொடுக்கப்படுகிறது. அந்த ஆடைக்கு கோயில் நிர்வாகம் அவ்வப்போது அறிவிக்கும் கட்டணமும் பெறப்படுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசக தெய்வீகத் தொடர் ..

உபநிஷத மந்திரங்களின் விளக்கத்-துடன்

திருப்பெருந்துறையில் அருளிய

# சிவபுராணம் ..



## அனாதி முறைமையான பழமையோடு அருளும் சிவபிரான்



**22 – எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி**

**எண்ணுதற்கு எட்டாத எழில் ஆர் கழல் இறைஞ்சி**

**கணக்கிட முடியாத மகிமைகளையுடைய அவனது திருவடியை வணங்கி –**

**அனந்த கல்யாண குணங்களையுடையவர் ஈசுவரன். அவை யாவும் அவருடைய மகிமைகள் அல்லது விபூதிகள் எனப்படுகின்றன. அவைகளை கணக்கிட ஈசனார்க்கே இயலாதென்றால் ஜீவர்கள் அவையனைத்தையும் எப்படி அறிந்துகொள்ளப் போகின்றனர்!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 -- விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியா

24 -- யெண்ணிறந் தெல்லை யிலாதானே நின் பெருஞ்சீர்

25 -- பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்

விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்

எண் இறந்து எல்லை இல்லாதானே நின் பெரும் சீர்

பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன்

வான் உலகு, நிலவுலகு ஆகியவைகளை நிரப்பி, அவைகளுக்கு அப்பாலும் இருக்கிறாய். கட்புலனாகின்ற ஜோதியாய் இருக்கிறாய். அளவு கடந்து எங்கும் நிறைந்திருக்கிறாய். உன்னுடைய பேரமைப்பைப் பாராட்டுகிற வழியை வினையில் கட்டுண்டு கிடக்கிற நான் சிறிதேனும் அறிந்திலன்.

அண்ட பகிரண்டமாய் விரிந்திருப்பது பரம்பொருள். அவையாவையும் கடந்திருப்பதும் பரம்பொருள். ஆதலால் அதற்கு கடவுள் என்று பெயர் வந்துள்ளது. வான வெளியில் கணக்கற்ற நட்சத்திரங்களாய் ஒளிர்பவை யாவும் பரம்பொருளின் ஸ்தூல தோற்றங்களாகும். இத்தனை கோடி அண்டங்களின் ஒழுங்குப்பாடான நடைமுறை வியப்புக்குறிய விஷயமாகும். மேய்தற்கென்று கயிறிட்டுக் கட்டி வைத்துள்ள காளைக்கு மைதானம் முழுதும் சுற்றிப்பார்க்க முடியாது. வினையின் விளைவாக உடலை எடுத்து ஐம்பொறிகளில் கட்டுண்டு கிடக்கிற நான், அகிலப் பிரபஞ்சமாய் விளையாடுகிற உன்னை எங்கனம் அறிந்து போற்ற முடியும்!



## உபநிஷத மந்திரம் -- 10 விளக்கவுரை

அநாத்யனந்தம் கலிலஸ்ய மத்யே விச்வஸ்ய
ஸ்ரஷ்டாரம் அநேக ரூபம் 1
விச்வஸ்யைகம் பரிவேஷ்டிதாரம் ஞாத்வா
ஆதவம் மூச்யதே ஸர்வபாசை 11
(ஸ்வேதாச்வதரோப நிஷதம் 5 -- 13)

ஆதியந்தமில்லாதவனை, பிரளயத்தினின்று விசுவத்தை சிருஷ்டி செய்கின்றவனை, எண்ணிறந்த வடிவெடுத்திருப்பவனை, அனைத்தையும் மூடிக்கொண்டிருப்பவனை அனுபூதியில் அறிகிறவன் பாசங்களிலிருந்து முக்தியடைகிறான்.

இறைவனே ஜடப்பொருள் சேதனப்பொருள் ஆகிய அனைத்தும் ஆயினான். கல், புல் போன்ற அற்ப உயிர்களில் துவக்கி பிரம்மதேவன் வரையில் உள்ள எல்லாவித உயிர்களாக அவனே பரணமித்தான்.

அவ்வுயிர்களைத் தங்கள் நிஜ சொரூபம் தெரியவொட்டாது அவனே மறைத்து வைத்தான். இப்படி அவனையும், அவனது வடிவங்களையும், செயல்களையும் உள்ளபடி சுவானுபூதியில் அறிகிறவன் முக்தியடைகிறான்.

**அடுத்த இதழில் சிவ அனுக்கிரகத்துடன்,**
**புல்லாகிப் பூடாய்ப்**
**புழுவாய் மரமாகிப் ..**
**(விளக்கவுரை)**

**நன்றி : ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்,**
**திருவாசகம் புண்ணிய நூலிலிருந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபநாள் ஸ்பெஷல்!!



**கங்கா ஸ்நானமும், மகிழ்ச்சியும் மக்களுக்கு ..**
**பரமாத்மாவின் கையால் முக்தியோ தனக்கு ..**
**-- நரகாசுரனின் தந்திரம்!**

நரகாசுரனால் தேவர்களும், முனிவர்களும் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. யாகங்கள் நடத்த முடியாமல் தவசிரேஷ்டர்களும், நல்லாட்சி நடத்தமுடியாமல் தேவர்களும் திண்டாட வேண்டியிருந்தது. மாறாக, தங்களின் உயிரைக் காத்துக்கொள்வதே கேள்விக்குறியாகியது அவர்களுக்கு.

தேவேந்திரனிடம் சென்று முறையிட்டால் அவனின் கதையோ அதிக சோகமாக இருந்தது. எந்த நேரத்திலும் தேவலோகத்தின்மீது நரகாசுரன் படையெடுப்பான் என்ற அச்சத்தில் அவன் நடுங்கிக்கொண்டிருந்தான். தனது லோகத்தையே காப்பாற்ற முடியாத நிலையில் பூவுலகத்தை காப்பாற்றுவதாவது?

நரகனின் வதைகள் உச்ச நிலையை அடையவே, இதற்கு தீர்வு காணக்கூடியவர் காக்கும் கடவுளான நாராயணனே என்பதால், எல்லோரும் வைகுண்டத்தை நாடினார்கள்.



**சத்தியபாமாவின் வீரம் --**

**அது, மனைவியருக்கான தைரியம் ..**

நாராயணனோ அப்போது கிருஸ்ணாவதாரம் எடுத்திருந்தார். தேவேந்திரன் தலைமையில் எல்லோரும் சென்றபோது, கிருஷ்ணர் துவாரகாபுரியை நிர்மாணம் செய்துகொண்டு, அங்கேயே சிறிதுகாலம் விச்ராந்தியாய் இருந்தார். அப்போதுதான் ருக்மிணியையும் மணமுடித்திருந்தார். தொடர்ந்து, சத்தியபாமாவையும் மணம்புரிந்த நிலையில் கிரஹஸ்தனாக இருந்தார். இடையிடையே லோக நன்மையை கருதி அசுரர்களை வதம்செய்து வந்தார்.

இந்நேரத்தில்தான் இந்திராதியோர் பகவானை வைகுண்டத்தில் சென்று சந்தித்தார்கள். ஒவ்வொருவரும் நரகாசுரனால் படும் துன்பங்களை சொல்லி ஓய்ந்தார்கள்.

**மேலுமொரு அசுரனை ஒழிக்கும் வேலையை பகவான் ஏற்றார். இம்முறை அழிக்கும் அசுரனின் வாயிலாக ஒரு நீதியையும் உலகத்திற்குச் சொல்லவேண்டும் எனவும் திருவுளம் கொண்டார்.**

கருட வாகனத்தில் ஏறிக்கொண்டு போருக்குப் புறப்பட்ட கிருஸ்ணரோடு சத்தியபாமாவும் ஏறிக்கொண்டாள். இதுவும் பகவானின் சித்தமே. ஏனெனில், சத்தியபாமா உடன் வருவதன் மூலம் ஒரு தாயின் மனநிலையை உலகம் அறியப்போகிறது. பெற்ற பிள்ளையை தண்டிக்கவேண்டுமானால் தந்தை மட்டுமல்ல, தாயும் தயாராக இருக்கவேண்டும் என்பதை கண்ணன் உணர்த்த விரும்பினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன! கிருஷ்ணரும், சத்தியபாமாவும் நரகாசுரனின் பெற்றோர்களா? ..


ஆமாம்! எப்படியென்றால், பாற்கடலை தேவ, அசுரர்கள் கடைந்தபோது மத்தாக மந்தார மலை பயன்பட்டது அல்லவா? அந்த மலையை ஆதாரமாக தாங்கிக் கொள்வதற்காக கூர்ம அவதாரம் எடுத்து பகவான் கடலின் அடியில் சென்றார். அப் பணியை அவர்செய்துகொண்டிருந்த காலத்தில் பூமாதேவியானவளுடன் காதல் ஏற்பட்டது. அவர்களுக்கு பிறந்தவனே நரகாசுரன் என்று புராணம் சொல்கிறது. அதுபோல பூமாதேவியே சத்தியபாமாவின் உருவெடுத்து கிருஷ்ணரை மணந்திருப்பதால் இருவருமே நரகாசுரனுக்கு பெற்றோர்கள் ஆகிறார்கள்.

**லோகத்தின் விரோதியாக தமது மகன் இருப்பதால் அவனைத் தண்டிக்க வேண்டியது தர்மமே என்பதை பெற்றோர்கள் உணரவேண்டும். அந்த மனவுறுதி தந்தைக்கு மட்டுமல்ல, தாயிடமும் இருக்கவேண்டும் என்பதை கிருஷ்ணர் உணர்த்த விரும்பினார்.**

தவிர, பொறுமைக்கு உதாரணமான பூமாதேவியே துஷ்டர்களின் அஜாரகத்தினால் பொறுமையிழந்து ஒரு முடிவுக்கு வந்தாள்.

-- மறு பக்கம் பார்க்க ..



**தீபாவளியன்று நாம் நீராடும் ஜலத்தில் கங்காதேவி வந்தமர்கிறாள்! ஆதலால், அன்று நம் குளியல் புண்ணியம் நிறைந்துள்ளதை கவனத்தில் கொண்டு நீராட வேண்டும் .**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒருநாள் பசு வடிவமெடுத்து மகாவிஷ்ணுவிடம் சென்று தனது நிலையைக் கூறிப் பிரார்த்தித்தாள். இதனால் மனமிறங்கிய பகவான் தீயவர்களை அழித்து பூமிப்பாரத்தை குறைப்பதற்காக கிருஷ்ணராக அவதரித்தார்.

அவ்வாறே அவர் கம்சன், சிசுபாலன், ஜராசந்தன், துரியோதனன் முதலானவர்களை ஒழித்து வந்தார். இவர்களின் வரிசையிலே நரகாசுரன் மோசமான அரக்கனாக இருந்ததாலும், தமது மைந்தனாகவும் இருப்பதாலும் தம்பதியாக சென்று அழிப்பதே முறையென்று புறப்பட்டனர்.

அநேக கோட்டைகளை அமைத்து, அதனுள்ளே இருந்தான் நரகன். சுற்றிலும் தண்ணீர் பிரவாகமாக அரண்கள். எல்லைகளாக சுற்றிலும் மலைகளாலான சுவர்கள். கூடவே அக்கினிக்கோட்டை, வாயுக்கோட்டை என்று பல அரண்கள்!

கிருஷ்ணரும் ஒவ்வொரு கோட்டையாக நிர்மூலமாக்கிவிட்டு நேராக அசுரனின் நகருக்குள் நுழைந்தார். தனது பாஞ்சஜன்யத்தை எடுத்து ஊதி அவனை போருக்கழைத்தார்.

பெரும் யானை மீதமர்ந்து ஆவேசத்துடன் வெளியே வந்தான் நரகாசுரன். பெரும் பலத்தோடு போரிட்ட அவனுடன் கருடன்மீது அமர்ந்து சமர் புரிந்தார் கிருஷ்ணர். அவனுடைய பெரும் அசுரப்படையை எதிர்கொள்வதில் கருடனும், சத்தியபாமாவும் அவருக்கு உதவியாக இருந்தார்கள்.





முழுச் சேனைகளையும் அழிக்கும் ஆற்றல் தன்னிடம் இருப்பதை அறிந்தும் இந்த யுத்தத்தில் தனது மனைவிக்கு பயிற்சியளிக்க பகவான் விரும்பினார். சத்தியபாமாவின் போர்த்திறன் கிருஷ்ணருக்கு மகிழ்ச்சியை கொடுத்தது.

**ஆபத்துக்காலத்தில் கணவனுக்கு உதவும் தைரியத்தை மனைவியானவள் பெற்றிருக்க வேண்டும் என உணர்த்த விரும்பிய அவரின் விருப்பம் நிறைவேறியது. நரகாசுரனை வீழ்த்துவதில் சத்தியபாமாவின் பங்களிப்பு இன்றும் குறிப்பிடப்படுகின்ற ஒன்று.**

அசுர சைன்யம் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து நரகாசுரனுக்கும், பகவானுக்கும் நேரடி மோதல் நிகழ்ந்தது. முதல்நாள் தொடங்கிய யுத்தம் இரவையும் தொட்டு, விடியும்வரை நடந்தது. இருள் நீங்கிய அருணோதய காலத்தில் தனது சக்ராயுதத்தால் நரகாசுரனை சங்கரித்தார் கிருஷ்ணர்.

பொழுதும் விடிய, இந்த செய்தியால் உலகமே மகிழ்ந்து துள்ளிக்குதித்தது. சாகும் தருவாயில் தனது மரணநாளை சகலரும் மங்கள ஸ்நானம் செய்து கொண்டாடி மகிழவேண்டும் என்று வரம் கேட்டான் அசுரன். பகவானும் அவ்வாறே வரம் தந்தார். தனது கையால் மரணமடைந்து முக்திபெற அவன் காத்திருந்த தந்திரம் தெரியாதா அவருக்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மார்கழி டிப்ஸ் ..

சைவ மக்கள் திருவெம்பாவை விரதத்தை மார்கழி மாதத்தில் வருகின்ற திருவாதிரை தினத்திற்கு ஒன்பது நாட்களுக்கு முன்னர் ஆரம்பிப்பார்கள். பத்தாவது நாளாகிய திருவாதிரை அன்று விரதம் நிறைவுறும் ..


ஆனால் வைணவ சமயத்தில் மார்கழி மாதத்தில் முழு நாட்களிலும் விரதமிருந்து மக்கள் வழிபடுவார்கள் ..

மார்கழி மாதம் தட்ஷிண அவயத்தின் கடைசி மாதமாகும். தேவர்களுக்கு இம் மாதம் ஒரு அதிகாலைப் பொழுதாகும். இக்காலத்தில் வைகறையில் இறை தரிசனம் செய்யும்போது பெரும்பலன் கிடைக்கிறது ..

திருவாதிரை திருவெம்பாவையும், விநாயகர் சஷ்டியும் மார்கழியில் பெருமை பெறுகிறது.

சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம் இம் மாதத்திலேயே வருகிறது. சைவர்களும், வைணவர்களும் பேறு பெறும் புண்ணிய காலப்பகுதி இதுவாம் ..


கன்னிப்பெண்களுக்கு அதிக பலன் தருவது மார்கழி விரதமாகும். மங்கையர்கள் அதிக சிரத்தையுடன் நோற்பதால் பாவை நோன்பு என்றும் அழைக்கப்படுகிறது ..




## மகளிர் பக்கம்

கோலம் போடாதவர்கள்கூட மார்கழியில் வாசலில் கோலம் போடுவார்கள். வைகுண்ட ஏகாதசியிலே பெருமாள் தனது அரிதுயில் களைந்து கண்விழிப்பார். இது மார்கழியிலேயே வருவதால், தேவர்கள் வைகுண்டத்திற்குப் பறந்து வரும்போது வீட்டு வாசல்களில் போடப்பட்டிருக்கும் கோலங்களைக் கண்டுகளித்து, வாழ்த்திச் செல்வதாக நம்பிக்கை உண்டு.


அதோடு, இந்த மாதத்தில் போடப்படுகின்ற கோலத்தில் பசுஞ்சாணம் இட்டு, அதில் ஒரு பூசணிப்பூவையும் வைத்துவிட்டால் வீட்டின் சிறப்புக்கு ஈடில்லை என்கிறது சாஸ்திர நூல்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறை பார்ப்பதன் பலன் யாது?

பிறை பார்ப்பதால் பல நன்மைகள் நமக்குக் கிடைக்கின்றன. சுகம், அபமிருத்யு (தோஷ நிவர்த்தி ) தனலாபம், ஆகிய பலன்கள் கிட்டுகின்றன. ஒவ்வொரு மாதமும் சுக்கில பிரதமை, துவிதியை தினங்களில் சந்திர தரிசனம் செய்வது அதி விஷேசமானது. அதிலும் அன்று ஞாயிறு தினமாக இருந்தால் இன்னும் சிறப்பாம்.



பிறையை இலவசமாக பார்க்கலாம் -- அதிருஷ்டலாப சீட்டு வாங்கத்தான் பணம் வேண்டும் ..

# தெய்விக சந்தேகங்கள்


## கண் திருஷ்டி என்பது ஆபத்தா?

ஆபத்து என்பதல்ல. அது ஒரு எச்சரிக்கை உணர்வு மட்டுமே. அதனை சாஸ்திரங்களும் ஆமோதிக்கின்றன. அதனால் பரிகாரங்களையும் சொல்கின்றன.

மனிதர்களின் கண்கள் மட்டும்தான் திருஷ்டி தோஷத்தை ஏற்படுத்தும் என்பதும் தவறாம். மிருகங்கள், பறவைகள், பாம்பு முதலிய பிராணிகளின் பார்வைக்கும் அந்த சக்தி இருக்கிறதாம். அவைகளின் கண்கள் வழியாக தீய சக்திகள் நம்மை தாக்குகின்றன.

இந்த திருஷ்டி தோஷத்தை நீக்க பல வழிகளை பின்பற்றுகிறார்கள். அவற்றில் எண்ணையால் திருஷ்டி விளக்கேற்றி வழிபடுதல், தலைக்கு நல்லெண்ணை தேய்த்து நீராடுதல் போன்றவை சாஸ்திர ரீதியானவை.

மகா கும்பாபிஷேகம் காணுதல், சாதுக்கள் தரிசனம், மகான்களை வணங்குதல், புனித நீர்நிலையில் நீராடுதல் போன்றவற்றால் திருஷ்டி தோஷம் நீங்குகிறது. வீட்டு வாசலில் மரம் வளர்ப்பது பொதுவாகவே பாதுகாப்பானது. மறைந்துபோன நமது முன்னோர்கள் அதில் குடியிருந்து நம் குடும்பத்தைக் காக்கிறார்கள் என்பதும் நம்பிக்கை.



வாசலில் மரம் வளருங்கள் -- உங்கள் தாத்தா, பாட்டி உங்களை காப்பாற்றுவார்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்ஞானம் அகலும் நாள்

" தீபாவளியில் தவறிப்போகின்ற நல்ல விஷயங்கள்!.. "

--வாரியார் வருத்தம் ..



தீபாவளி எனும் நந்நாளை பொன்னாளாக கருதி கொண்டாடி மகிழ்கிறார்கள். இப்பண்டிகை தருகின்ற இன்பமானது ஒவ்வொரு குடும்பத்தையும் சிரிக்க வைக்கிறது, கவலைகளை மறக்கச் செய்கிறது ..

குதூகலத்திற்கும், கொண்டாட்டத்திற்கும் அப்பால் புண்ணியத்தையும் நமக்காக இந்த நாள் கொண்டு வருகின்றது என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டுமல்லவா?

நரகாசுரனை கண்ணபிரான் சங்கரித்த நாளாக மட்டுமே நாம் இதனை அறிந்துகொண்டு கொண்டாடி வருகிறோம். அது அவ்வாறே ஒரு பக்கம் இருக்கட்டும். ஆனால், ஒரு சாதாரண அரக்கனை கொல்வதால் மட்டும் ஒரு கொண்டாட்டத்தை நடத்துவதானால் இரண்ணியனைக் கொன்ற நாள், இராவணனைக் கொன்ற நாள், கம்சனைக் கொன்ற நாள், துரியோதனனைக் கொன்ற நாள், இன்னும் இரண்ணியாட்சன், ஜலந்தராசுரன் என்று பிரபல அசுரர்களை ஒழித்த எல்லா நாட்களையுமே நாம் கொண்டாட வேண்டியிருக்கும்.. அதற்கு நம் ஆயுளே போதாமலிருக்கும்.. ஆகவே, தீபாவளி என்பது நரகாசுரனை கொன்றதால் மட்டுமே ஏற்பட்டதன்று.

எத்தனையோ அர்த்தங்களும், புண்ணியங்களும் அந்த நாளில் நிறைந்து காணப்படுகின்றன. அவைகளையும் அறிந்துகொண்டு முடிந்தளவுக்கு கடைப்பிடித்தால் அந்நாளின் மகிழ்ச்சியோடு, இறையருளும் இனாமாகக் கிடைக்கும் ..



-- திருமுருக கிருபானந்த வாரியார்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கார்த்திகை மாத
# ராசிப்பலன்! ..




சோதிடர் எஸ். நாகலிங்கம்
சோதிட ஆராய்ச்சி நிலையம்,
மன்னார்
தொலைபேசி : 071 -- 3079336
023 -- 2250263

**மேஷம்: --** பணவரவுகளில் நெருக்கடிகள் ஏற்பட இடமுண்டு என்பதால் ஆடம்பர செலவுகளைத் தவிர்த்தால் சமாளிக்கலாம். ஜன்ம ராசிக்கு 7இல் ராகு, சனி, சூரியன் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் அமைதியைக் குறைக்கும். விட்டுக்கொடுத்து அனுசரிப்பது நல்லது. உத்தியோகத்தில் அனுசரித்து நடப்பது நல்லது. துணிச்சலான சுபாவம் கொண்ட நீங்கள் துர்க்கை அம்மனை வழிபட்டு வருவதும் முக்கியம்.

**ரிஷபம் : --** கௌரவமும், பதவிகளும் கிடைக்கும். விரும்பும் இடத்துக்கு மாற்றமும் உண்டு. தொழில் விருத்தி, குடும்ப அன்னியோன்யம் சிறக்கும். தொழில், வியாபாரங்களில் எதிர்ப்பு இருக்காது. முயற்சிகள் கைகூடும். 2 இல் குருவும், 6 இல் சூரியன், சனி, ராகுவும் சஞ்சரிப்பதால் பொருளாதாரம் சிறக்கும். கொடுக்கல் வாங்கலும், முயற்சிகளும் வெற்றிபெறும். நாராயண வழிபாடு செய்யவும்.

**மிதுனம் : --** வருமானம் சுமார் அளவுதான். தொழில் பேட்டிகள், மறைமுக எதிர்ப்புகள் கொஞ்சம் குறையும். பிணை நிற்பது, மற்றும் கொடுக்கல் வாங்கல்களை தவிர்க்கவும். ஜன்ம ராசியில் 3இல் செவ்வாயும் மாத முற்பகுதியில் 6.ல் சூரியனும் சஞ்சாரம் புரிவதால் பிரச்சினைகள் குறைந்து வரும். மகா லட்சுமி வழிபாடு நன்மை தரும்.



**கடகம் : --** சொத்துக்களினால் விரயங்களுண்டு. எதிர்பார்த்த உயர்வுகளை உத்தியோகத்தர் தவறவிடுவர். மேலிடங்களோடு நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. 2ல் செவ்வாயும், 4ம் வீட்டில் சனியும், சூரியனும் சஞ்சாரம் செய்வதால் ஆரோக்கித்தில் பாதிப்புகள் ஏற்படலாம். வைத்தியச் செலவுகள் ஏற்படும். குடும்பத்தவர்களையும் சுகயீனம் பாதிக்கலாம். முருக வழிபாடு உதவி புரியும்.


**சிம்மம் : --** மகிழ்ச்சியான நிகழ்வுகளுக்கு உரிய மாதம் இது. செல்வாக்கும், தனமும் உண்டு. வரவுகளும், பயண அனுகூலங்களும் உண்டு. 3ல் சனி, ராகுவும் சூரியனும் 11ல் குரு சஞ்சாரமும் இருப்பதால் முயற்சிகள் அனைத்திலும் வெற்றியே. விரும்பிய இடமாற்றத்தோடு பதவி உயர்வுகளும் உண்டு. லாப அனுகூலங்களும் உண்டு. மகா விஷ்ணுவை பூஜித்து வரவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கன்னி : -**

இக்கட்டான நிலைகள வர நேரிடும். குடும்பத்திலும், நெருக்கமானவர்களிடத்திலும் முரண்பாடுகளை சந்திக்கலாம். வைத்தியச் செலவுகளும் ஏற்படும். ஜன்ம ராசிக்கு 2ல் சூரியன் சனி ராகுவும், 12ல் செவ்வாயும் சஞ்சரிப்பதாலேயே இந்த பின்னடைவுகள் உள்ளன. தொழிலிலும், பண விவகாரங்களிலும் நம்பிக்கை துரோகம் இழைக்கப்படுவீர்கள். குலதெய்வத்தை வழிபடவும்.



**துலாம் : --**

புதிய வட்டாரங்களிலிருந்து உதவிகள் வந்து சேரும். எதிர்பாராத ஆதரவுகள் கிடைக்கும். முக்கியஸ்தர்களின் உறவு ஏற்படும். 9ல் குருவும், 11ல் செவ்வாயும் சஞ்சரிப்பதால் இத்தகைய முன்னேற்றங்கள் நிகழ இடமுண்டு. சிறுசிறு உடல் உபாதைகள் ஏற்படலாம். பக்திபூர்வமான பிரயாணங்கள் உண்டு. சிவபெருமானை பூஜிக்கவும்.



**விருச்சிகம் :**


வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்க தடைகளுண்டு. எனினும் தேவைகளை ஈடேற்ற பணவரவு கிடைக்கும். தொழில் முயற்சிகள், புதிய வியாபாரங்கள் பலனளிக்கும். 8ம் வீட்டில் குருவும், 12ல் சனி ராகுவும், சூரியனும் சஞ்சரித்தாலும் 10ல் செவ்வாய் உலவுவதால் காரிய சித்தியுண்டு. உத்தியோகத்தர்களுக்கு பணியிலும், அரசாங்க வழியிலும் ஆதரவிருக்கும். சிவ வழிபாடு செய்யவும்.

**தனுசு : -**

தொழில், வியாபாரம் விருத்தியடையும். உதவியாளர்களும், நண்பர்களும் ஆதரவளிப்பர். திட்டமிட்ட விஷயங்கள் ஈடேறும். 7ல் குருவும், 11ல் சனி ராகுவும் சஞ்சரிப்பதால் இத்தகைய நற்பலன்கள் கைகூடுகின்றன. உத்தியோகத்தர்களுக்கு உயர்வுகளும், இலகு பணிகளும் அமையும். கடன் சுமை குறைந்து நிம்மதி ஏற்படும். அனுதினமும் பிள்ளையாரை வணங்கவும்.

**மகரம் :**

நெருக்கடிகளுக்கு இடமுண்டு. குடும்பத் தேவைகளை சமாளிக்க கடன் படவும் வாய்ப்புண்டு. அதேநேரம் நீங்கள் கொடுத்த பணமும் வராது. 6ல் குருவும் 8ல் செவ்வாயும் உலவுவதால் எதரிகள் உருவாவர். உதவியற்ற நிலையை உணர்வீர்கள். வீண் சச்சரவுகள் வந்து சேரும். வழக்குகளில்கூட சிக்க நேரிடும். மாதத்தின் கடைசிப்பகுதியில் சூரியன் 11ல் சஞ்சாரம் செய்ய இருப்பதால் ஓரளவுக்கு நிம்மதி கிடைக்கும். குரு வழிபாடு நல்லது.



**கும்பம் : --**


பண விஷயங்களில் திருப்தி கிடைக்கும். கடன்கள் வசூலாகும். இனசன ஆதரவு உண்டாகும். 5ம் வீட்டில் குரு சஞ்சாரம் நிழ்வதால் இத்தகைய அனுகூலங்கள் இருக்கின்றன. மாத கடைசிப்பகுதியில் 10ம் வீட்டில் சூரியன் சஞ்சரிப்பதால் உத்தியோகத்ர்களும் பல பலன்களை எட்டுவர். தொழிலாளர்கள் வியாபாரிகளும் சிறப்படைவர். தெய்வ வழிபாடுகளை முன்னெடுத்து வரவும்.

**மீனம் : --**

சூரியனும் சனி ராகுவும் 8ல் சஞ்சரிப்பதால் இம்மாதத்தில் சஞ்சலங்களுக்கு ஆளாக நேரிடுகிறது. தேக சுக பாதிப்புகளும், மனக்குழப்பங்களும் வாட்டும். சகஜ வாழ்க்கையை நடத்த முடியாமல் இருக்கும். இனசன விரோதங்களும் உண்டு. சுப காரியங்களும் தடைப்படும். நன்மை செய்து தீய பலன்களும் வரும். சனி வழிபாடும், பரிகாரங்களும் விடாமல் செய்தால் விமோசனம் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபநாள் செய்திகள்..



## கார்த்திகை தீபங்கள்! 16 !!


கார்த்திகை தீபங்களில் 16 வகைகள் உள்ளன.

அவை தூபம், மகா தீபம், அலங்கார தீபம், நாக தீபம், விருட்சப தீபம், புருஷாமிருக தீபம், ஓல தீபம், கமடதி தீபம், கனு தீபம், வியான்ர தீபம், சிம்ம தீபம், துவஜ தீபம், மயூர தீபம், ஐந்தட்டு தீபம், நட்சத்திர தீபம், மேரு தீபம் ஆகியனவாகும்.

இவற்றுள் சிவனுக்குரிய மகாதீப விழாவை உமாதேவியே தொடக்கி வைத்ததாக புராணங்கள் கூறுகின்றன.

மகாதீபம் என்பது மிகவும் பிரம்மாண்டமான ஒளியை தருவதாகும். இதற்கு 3000 கிலோ பசுநெய், ஏழு அடி உயரம் கொண்ட பெரிய செப்புக் கொப்பரை, திரியாக பயன்படுத்த சுமார் 1000 மீட்டர் காடாத்துணி, கூடவே இரண்டு கிலோ கற்பூரம் பயன்படுத்தப்படுகிறது.

தமிழகத்திலுள்ள திருவண்ணாமலை மீது தொடர்ந்து 11 நாட்களுக்கு இந்த மகாதீபம் ஒளி வீசும். அந்த மலைமீது மட்டுமல்லாமல் அம்மலைத் தொடரில் கோயில் கொண்டிருக்கும் அத்தனை முருகன் ஆலயங்களிலும் இந்த மகா தீபம் ஏற்றப்படுகிறதாம்!



## மகா தீபம்!






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கண்ணும், கருத்தும் குளிர்ந்துபோகும் கார்த்திகை மாதத்தில் -- தீபங்களின் பேரெழில் ஊரெல்லாம் தெரியும் ..





# கார்த்திகை மாத தீப மகிமைகள்...

மகாவிஷ்ணுவின் திருத்தலங்களில் தீப விழா எடுப்பது ஒருபடி அதிகம்தான். அன்றைய தினத்தில் தீபத்தை சிறப்பாக அவருக்கு கொண்டாடுகிறார்கள் பக்தர்கள். அன்றைய தினத்தில் பெருமாள் பொதுவாக வீதியுலா வருவதுண்டு.

பின்னர் திருப்பு மண்டபம் என்ற இடத்தில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார். அதன் பின்னர் கோயிலுக்கு எதிரே உள்ள ஆலய நுழைவாயிலில் சொக்கப்பாணை கொளுத்துவதைக் கண்டு கழிப்பார்.

அதன் பின்னரே ஆலயம் செல்வார். அப்போது பக்தர்களுக்கு லட்டும், பொரியும் பொதுவாக தருவது வழக்கம் ..

சைவர்களைப்போலவே வைஷ்ணவர்களும் கார்த்திகை தீபத்திருநாளைக் கொண்டாடுவர்.

பிரம்மா சரஸ்வதியைவிட்டு விலகியிருந்த நேரத்தில் ஒரு யாகம் செய்தார். அதைக்கண்டு கோபமடைந்த சரஸ்வதி வேகவதி நதியாக உருவெடுத்து வந்து தடுத்தாள். பிரம்மாவின் யாகத்தைக் காக்க எண்ணிய பெருமாள் பெரிய ஒளிப்பிழம்பாக மாறினார்.

அந்த ஒளிப்பிழம்பின் பெயர் தீபப் பிரகாசர். இவர் ஒளி வடிவில் இருந்து பிரம்மாவின் யாகத்தைக் காக்க, சிவலிங்கத்தை நிறுவி முழுமுதற் கடவுளான ஈசனை வழிபட்டார்.

அந்த லிங்கத்தின் பெயர் விளக்கொளி நாதர். தீயேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார். பெருமாளையும், சிவபிரானையும் இவ்வாறே வைஷ்ணவர்கள் கார்த்திகையில் வழிபடுகின்றனர்.









விளக்கொளி நாதர்..! தீயேஸ்வரர்..!! யார் இவர்கள்? சிவனும், விஷ்ணுவும் கார்த்திகை ஒளியாக இணைந்தவர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீச்சர சிவபூமியில் --

“ தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே .. ”

## அடியார்களுக்கோர்

# அம்மை அப்பன் இல்லம்!



சிவ சிவ .. என்ற ரீங்காரம் எந்நேரமும் ஒலிக்கின்ற இந்த பூமியிலே அன்றாடம் தஞ்சமடையும் உயிர்கள் ஏராளம் .

அன்றொரு நாள் ஒரு கைப்பையுடன் வந்திறங்கினார் ஒரு அம்மையார். தனது இனிய குடும்பத்தை மொத்தமாக இழந்து, கேதீச்சரநாதனே கதியென பாலாவிக்கரையிலே தஞ்சமானார்.

அவரின் சரணாகதியை இறைவன் ஏற்றார். தன்னை மட்டுமல்லாமல் எத்தனையோ அடியார்களை வரவேற்று, ஆதரித்து, சிவப்பேறு கிடைக்கச்செய்ய இப்போது உழைத்துக் கொண்டிருக்கிறார் .. என்னே சிவனருள்!

செல்வி பஞ்சலட்சுமி வல்லிபுரம் அவர்களின் நினைவாக அழகான, ஆத்மீகத்துடன் கூடிய வசதியான ஒரு இல்லம் 2008 ஆம் ஆண்டு மகா சிவராத்திரி மடத்தின் நிர்வாகத்தின் கீழ் திருமதி சி. வல்லிபுரம் அம்மையார் அவர்களினால் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு புனிதத்துடனும், தெய்வீகத்துடனும் இயங்கி வருகிறது.



செல்வி. பஞ்சலட்சுமி வல்லிபுரம்

( அமரர் )




21.09.2006 இல் காலமாகிய மகள் செல்வி வ. பஞ்சலட்சுமி அவர்களின் நினைவுதினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்னாரின் 7 வது வருட நினைவு தினம் மகா சிவராத்திரி மட பரிபாலன சபையின் போஷகர்களுள் ஒருவராகிய திரு. க. இராசரத்தினம் அவர்களது தலைமையில் 03.10.2013 இல் அம்மையப்பன் இல்லத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. ஓய்வுநிலை அரசாங்க அதிபர்

திரு. வே. விசுவலிங்கம் அவர்கள் அன்னாரின் நினைவு தின உரை நிகழ்த்தினார்கள். பல பெரியோர்கள் பங்குபற்றி ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ஈடுபட்டுபட்டார்கள்.

காலமான செல்வி பஞ்சலட்சுமி யாழ். பல்கலைக்கழகத்தில் 1995ஆம் ஆண்டில் வைத்தியத்துறையில் பட்டம் பெற்று, பதுளை, களுபோவில ஆகிய வைத்தியசாலைகளில் சேவையாற்றி 21. 09. 2006 இல் இறைவனடி சேர்ந்தார். புற்று நோயால் பாதிக்கப்பட்ட அன்னார் தனது தந்தையின் இறப்பின் பின்பு தனது தாயார் அவர்கள் கொழும்பில் தனிமையாக வசிக்க விரும்பாது கொழும்பு வீட்டை விற்றுத் திருக்கேதீச்சரத்தில் இல்லமொன்று அமைத்துச் சேவை செய்ய வேண்டுமென நினைத்து அதற்கான கட்டிடவரைபடம் ஒன்றை வரைந்து தாயாரிடம் கொடுத்திருந்தார். அவ்வரைபடத்தின்படி அமைப்பதற்கு தேவையான காணியைப் பெற்று கட்டிட வேலைகள் உடனேயே ஆரம்பிக்கப்பட்டு 16.04.2008 இல் அன்றைய மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வே. விசுவலிங்கம் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டு மகா சிவராத்திரி மடத்தின் அனுசரணையுடன் இயங்கி வருகிறது, அவரது தாயாராகிய திருமதி சி. வல்லிபுரம் அம்மா பலரது ஆதரவு, அரவணைப்புடன் இல்லத்தை இப்போது மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**இழப்புகளை எண்ணி நலிவுற்று வாழ்பவர்களுக்கு இது ஒரு செய்தி. காயங்களை இறைவனிடம் தந்துவிட்டு வாழ்க்கையை பெற்றுக்கொள்வதற்கு உதாரணம் இந்த அம்மையார்!**



தான் திருக்கேதீச்சரப் பெருமான், கௌரிஅம்பாள் அழைப்பினால் ஆட்கொள்ளப்பட்டு ஆத்மீக பலத்துடன் வாழ்ந்து வருவதாகவும், தனது மகளின் ஆலோசனைக்கும், முடிவுக்கும் இணங்க

இவ் அம்மை அப்பன் இல்லத்தைக் கட்டி பணி செய்வதாகவும், திருக்கேதீச்சரம் வரும் அடியார்களுக்கு இருப்பிடம் வழங்கி உணவு கொடுத்து இளைப்பாறிச் செல்லும் இடமாக இருந்து வரும் இச் சேவை ஆத்மதிருப்தியுடன் செய்ய இறையருள் கிடைத்துள்ளதாகவும் கூறி பெருமிதம் கொள்கிறார் இந்த அம்மையார்.

45 படுக்கை வசதிகளுடன் பலரும் தங்கிச் செல்லும் இந்த இல்லம் ஒரு அரிய பெரிய சமூக, சமயப் பொக்கிசமாக கருதப்படுகிறது.



**திரு. வே. வல்லிபுரம் அவர்கள்**
**( அமரர் )**



**திருமதி. வல்லிபுரம் அம்மையார்**

காலமாகிய செல்வி. வ. பஞ்சலட்சுமி அவர்களின் தந்தையார் திரு. சி. வல்லிபுரம் ஐயா அவர்கள் திருக்தேச்சரத்துடன் மிக நெருக்கமாக இருந்து இறைபணி செய்து வந்ததுடன் மகா சிவராத்திரி தினத்திற்கு நிதி, பொருட்கள் சேர்த்து அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

திருக்கேதீச்சர நாதரின் சேவைக்கென தம்மை அர்ப்பணித்த வரலாற்றில் பதிவாகிய இக்குடும்பத்தில் இப்போது எஞ்சி நின்று உழைப்பவர் இந்த அம்மையார் மட்டுமே. ' வல்லிபுரம் அம்மா..' என அன்பாக எல்லோராலும் அழைக்கப்படுவராக அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான திலகவதியார் போல் சைவசமயத்தை பேணிப் பாதுகாத்துத் தினமும் இறைவழிபாடு செய்து வருகிறார். அவரது பணிகள் திருக்கேதீச்சரச் சூழலில் பல அடியார்களும் வந்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றி தங்கிச் செல்வதற்கு ஒரு பேருதவியாக இருப்பது அம்மையப்பன் இல்லம் என்றால் மிகையாகாது. இவர்களது சைவப்பணி மேலும் தொடர்ந்து நடைபெற திருக்கேதீச்சரப் பெருமானை அனைவரும் பிரார்த்திப்போமாக.

அமரர் வைத்திய கலாநிதி செல்வி வ.பஞ்சலிட்சுமி அவர்களின் குறிக்கோள்கள் செயல் வடிவம் பெற்று விளங்குவதால் அவரது ஆத்மா சாந்தியடைய யாவரும் இறைவனை பிரார்த்திப்போமாக.

நன்றி :

**திரு. க. ராசரத்தினம் அவர்கள்**
**ஓய்வுநிலை பிரதி திட்டமிடல் பணிப்பாளர்,**
**புலோலி கிழக்கு,**
**பருத்தித்துறை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீபம் -- விளக்கு, ஆவளி -- வரிசை
அதாவது தீபங்களின்
வரிசையானது தீபாவளியாம் ..

**தீபத்தை வரிசையாக ஏற்றிவைத்து சிவபெருமானை வழிபடுவதற்கு உரிய நாள் தீபாவளி.**

## தீபாவளி விரதம் ..

தீபாவளி முதல் நாளன்று பகல், இரவு முழுவதும் பட்டினி இருந்து, இரவில் தீபங்களை வரிசையாக ஏற்றிவைத்து சிவபூஜை செய்து, பிரம்ம முகூர்த்தத்தில் எண்ணை ஸ்நானம் செய்து, சிவபூஜையை முடித்துக்கொண்டு, விடியுமுன் புத்தாடை உடுத்தி, சுத்த சைவ உணவு உண்டு அனுட்டிப்பது தீபாவளி விரதமாகும்.

மாசி மாத அமாவாசைக்கு முன்தினம் மகா சிவராத்திரியும், ஐப்பசி மாத அமாவாசைக்கு முன்தினம் தீபாவளியும் வரும். சிவபெருமானை வழிபடும் விரதங்கள் எட்டு என கந்தபுராணத்தில் ஏழாவது காண்டமாகிய உபதேச காண்டம் பகர்கிறது ..


# கார்த்திகை சிறப்பு




அவையாவன :

01. கார்த்திகை சோமவார விரதம்
02. உமா மகேஸ்வர விரதம் (கார்த்திகைமாத பௌர்ணமி)
03. திருவாதிரை விரதம் (மார்கழி மாதத்தில்)
04. மகா சிவராத்திரி விரதம் (மாசி மாதத்தில்)
05. கல்யாண விரதம் (பங்குனி உத்திரம்)
06. பாசுபத விரதம் (தைப்பூசம்)
07. அஷ்டமி விரதம் (வைகாசி பூர்வ பட்ச அஷ்டமியில்)
08. கேதாரமாவிரதம் (இதுவே தீபாவளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீபநாள் செய்திகள்..





தீப மங்கள ஜோதியாக விளங்கும் பெருமானை நிரம்பலாக விளக்கேற்றி வணங்கினார்கள் நமது முன்னோர்கள்.

பிருங்கி முனிவர் சிவபெருமானை வணங்கும்போது சக்தி தேவியை விலக்கி, சிவத்தை மட்டும் வலம் வந்து வணங்கிய காரணத்தால் உமாதேவியார் வெகுண்டு இறைவனின் இடப்பாகம் பெறும்பொருட்டு, திருக்கைலாய மலையினின்று நீங்கி, கௌதம முனிவருடைய வனத்தையடைந்தார். அவ்வனம் அம்பிகையின் வரவால் மிகுந்த செழிப்புற்றது. தவளையுடன் பாம்பும், பாம்புடன் கீரியும் நட்புறவாடினவாம்!

கௌதமர் கௌரியை தொழுது துதித்தார். தீபாவளி விரதத்தை கௌதமர் தேவிக்கு கூற, உமையம்மையாரும் அவ்விரதத்தை நோற்று ஈசனாருடைய இடப்பாகத்தைப் பெற்று மகிழ்ந்தார்.

முதலாவதாக இந்த கேதார விரதத்தை கௌரியம்மை அனுட்டித்த காரணத்தால் இதற்கு கௌரி விரதம் என்று பெயர் வந்தது.

ஆனால் தீபாவளி விரதம் காலாந்தரத்தில் பல மாறுதல்களை சந்தித்து கவனிப்பாரற்றுவிட்டது. இந்தியாவில் குறிப்பிட்ட இந்து சமூகங்களும், இலங்கையில் பிராமண சமூகத்தினரும் இதில் கவனமெடுத்து வருவது தெரிகிறது.

தீபாவளி என்றால் கொண்டாட்டம் மட்டுமே என்ற நிலையில் குறிப்பிட்ட சில சமய நிகழ்ச்சிகள், கோயில் வழிபாடுகளோடு நிறுத்திக்கொள்கிறோம். ஆயினும் மனநிறைவோடும், மற்றவர்களின் மகிழ்ச்சியை கண்டு இன்புறும் தூய்மையோடும் தீபாவளியை நாம் கழிப்பதென்பதில் சந்தேகமில்லை. அந்த நாள் தரும் மனச் சந்தோஸத்திற்கு நிகருமில்லை.


தீபாவளியன்று தூங்கி விழித்து அதிகாலை எண்ணெயிட்டு நீராடி, புத்தாடை உடுத்தி, பலகாரங்கள் சாப்பிட்டு, பட்டாசுகள் வெடித்து நண்பர்களையும் பந்துமித்திரர்களையும் வாழ்த்தியும், குசலம் விசாரித்தும் மகிழ்வது மட்டுமே நடைமுறையாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்புக்கோர் அவதாரம் ..

# நம்மோடு வாழ வந்த தெய்வம்!



பெங்களூரில் ஒருநாள் கண்டோன்மன் என்ற பகுதிக்கு சத்திய சாயிபாபா சென்றிருந்தார். இதனை அறிந்த மக்கள் தரிசனம்பெற பெருந் தொகையில் அவர் இருந்த வீட்டுக்குப் படையெடுத்தனர். எல்லோர் கைகளிலும் பழங்கள், மலர்கள் என்று ஏராளமான நிவேதனப் பொருட்கள்.

அவ் வூரில் பாதணி திருத்தும் ஒரு ஏழைத்தொழிலாளியும் இருந்தான். பகவானைப் பற்றி ஊரார் புகழ்ந்தவாறு அலைவதை அவனும் கேட்டான். தனது தொழிலில் மனம் செல்லாமல் பகவானின் மகிமைகள் பற்றிய பேச்சுக்களால் தடுமாறினான். அவனது மனம் சாயிபாபாவை தரிசிக்கும் ஆர்வத்தில் தத்தளித்தது.

தோட்டத்தில் இருந்த ஒரு றோஜா மலரைப் பறித்துக்கொண்டு பாபா இருந்த வீட்டைத்தேடிப் புறப்பட்டான். பெருந்திரளாக அலைமோதிய கூட்டத்தில் தூர நின்று ஒருவாறு பாபா இருந்த திசையை நோக்கிப் பார்த்தான். கண்ணார சுவாமியை அவன் தரிசித்தான். அவனது இதயத்தில் இதுவரை அறிந்திராத அளவுக்கு அன்பு வெள்ளமாக பொங்கியது.

அப்போது பகவான் தனது கருணை பொங்கும் பார்வையை நேராக அவனை நோக்கித் திருப்பி தன்னிடம் வருமாறு அழைத்தார். இந்த இன்ப அதிர்ச்சியை தாங்க முடியாத நிலையில் அவர் அருகே அந்த தொழிலாளி சென்றான். இதனை அவன் எதிர் பார்த்திருக்கவில்லை.

சுவாமி அவனிடம் ''அன்பே, உனக்கு என்ன வேண்டும்?..'' என்று தமிழில் வினவியபோது அவன் மேலும் அதிர்ச்சியடைந்தான். ஏனெனில் அவனது தாய்மொழி தமிழாகும். இது எப்படி இவருக்குத் தெரிந்தது!

என்ன பதில் சொல்வதென்று தெரியாத நிலையில் அவரது அன்பில் நனைந்தவனாக ''சுவாமி, தாங்கள் எனது குடிசைக்கு வருவீர்களா? ..'' என்று கேட்டான்.

''கட்டாயமாக வருவேன் ..'' என்று பாபா சொன்னதும் ஆனந்தம் தாங்காமல் அவன் கண்ணீர் விட்டு அழுதான். அப்படியே அடியற்ற மரம் போல அவரது பாதங்களில் விழுந்து வணங்கினான்.

அங்கிருந்து அவன் புறப்பட்டு வரும்போது ஒன்றை உணர்ந்தான். எப்பொழுது சுவாமி வீட்டுக்கு எழுந்தருள்வார் என்பதை உணர்ச்சி வசத்தால் அவன் கேட்க மறந்ததே அது.

**சாயிராம்! ஜனன தின பிரசாதம்..**



1926ம் ஆண்டு பாரத மண்ணின் ஆந்திர மாநிலத்தில் புட்டபர்த்தி என்னும் குக்கிராமத்தில் கார்த்திகைத்திங்கள் 23ந் நாள் சூரியன் உதயமாகியபோது பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா திருஅவதாரம் செய்தார் ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி அவ்வூரில் இருந்து சென்று விட்டார். நாட்களும் பறந்தோடின. தனது தவறை நினைத்து வருந்தியவாறு அவர் வருவார் என்ற எதிர்பார்ப்பை மறந்து தனது தொழிலில் ஈடுபடலானான்.

ஒருநாள் தனது இடத்தில் அவன் தொழில் புரிந்த கொண்டிருந்தபோது தெருவுக்குள் நுழைந்த கார் ஒன்று அவனுக்கு முன்னால் வந்து நின்றது. பயந்துபோன தொழிலாளி தன்னை அப்புறப்படுத்த பொலிஸ்காரர்கள் வந்து விட்டார்களோ என்று தனது பொருட்களை அள்ளிக்கொண்டு ஓட ஆயத்தமானான்.

என்ன அதிசயம்! காருக்குள்ளிருந்து சுவாமி இறங்கினார். சிரித்தவாறே ‘‘ பயப்படாதே, காருக்குள் ஏறு. வீட்டுக்குப் போகலாம். ’’ என்றார்.

எதுவும் பேசமுடியாத நிலையில் அவரது வார்த்தையில் கட்டுண்டு காருக்குள் ஏறி அமர்ந்தான். அவனது குடிசைக்குச் செல்லும் பாதையை சுவாமியே சாரதியிடம் சொல்லிக்கொண்டு வந்தபோது அவனால் நம்பவே முடியவில்லை.

அவன் மறந்தான் ..
அவர் மறக்கவில்லை!

வீட்டு வாசலில் இறங்கியதும் உள்ளே ஓடிச்சென்ற தொழிலாளி மனைவியிடம் சுவாமி வந்திருப்பதைக்கூறிய பின் இருவருமாக அவர் அமர்வதற்கு விரிப்பையும் தயார் செய்து வைத்தார்கள்.
வாசலில் சுவாமியை இருவரும் வீழ்ந்து வணங்கி வரவேற்றார்கள். கருணைக்கடலான பாபா அவர்களின் அன்பில் நெகிழ்ந்தவாறு குடிசைக்குள் சென்று அமர்ந்தார்.

குடிசைக்குள் அவருக்கு நிவேதனமாக தருவதற்கு ஒன்றுமில்லையே என்று வேதனையோடு கைகளைப் பிசைந்து கொண்டிருந்வர்களைப் பார்த்து,

“எதற்கு வருத்தம்? எனக்குத் தேவையானதை தந்துகொண்டுதானே இருக்கிறீர்கள் ..’’ என்றார் பகவான். புரியாமல் திகைத்தவர்களை நோக்கி மீண்டும் சுவாமி கூறினார் -- ‘‘உங்கள் அன்பைத்தவிர எதையுமே பெற்றுக்கொள்ள வரவில்லை. நானும் அதையே உங்களுக்குத் தருகிறேன் ..” .

சிறிது நேரம் அவர்களோடு தங்கியிருந்த பாபா கைகளை அசைத்து இனிப்புப் பண்டங்களையும், பழங்களையும் வரவழைத்து அவர்களுக்குத் தந்து தாமும் உண்டார். விபூதி வரவழைத்து எல்லோருக்கும் பூசி வாழ்த்திச்சென்றார்.

சுவாமி வந்து சென்றதும் அந்த வீடு ஒரு புனித சின்னமாக மக்களுக்குத் தோன்றியது. பின்னாளில் அந்த இடம் ஒரு கோயிலாகவும் மாறியது.

ஜெய் சாயி ராம்! ..

அவதாரங்களின்
தொடர்ச்சி என்பது
இந்த பூமியை அன்பால்
காப்பதே.
நாம் வாழும்
காலத்திலேயே
மிகப்பெரும்
அவதாரம் இங்கே
நடந்திருக்கிறதென்றால்
நம்மைவிட
பாக்கியசாலிகள் யார்?





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மார்கழித்திங்கள் அல்லவா ..

## மார்கழியின் மகத்துவங்கள்

## திருப்பாவை --

பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவராகிய ஆண்டாள் பாடிய நூல் இது. இதில் முப்பது பாடல்கள் வருகின்றன. 'நாலாயிரத் திவ்விய பிரபந்தம் ' என்ற நாமத்தில் வைணவ பக்தி நூல்களின் தொகுப்பு உள்ளது. இதில் 473 தொடக்கம் 503 வரையான பாடல்கள் இந்தத் திருப்பாவையாகும்.

### நெய் உண்ணோம், பாலருந்தோம் ..

கன்னிப்பெண்கள் பாவை நோன்பு நோற்று, விடியும் முன்பே துயிலெழுந்து, பிற பெண்களையும் அழைத்துக்கொண்டு நீராடச் செல்வர். பின் இறைவனைத் தொழுது மங்கல வாழ்வினை வரமாகப் பெறுவர். இதன் பின்னணியாக எழுந்ததே இந்த பாடல்.

இதனால் பாவைநோன்பு என்ற இந்த நிகழ்வில் திருப்பாவை என்னும் பாடல்கள் இம்மாதத்தில் எங்கும் கேட்கின்றன.

''மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப்போதுவீர் பொதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆயர்பாடிச் செல்வ சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன்
குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனி செங்கண்
கதிர்மதியம்
போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய் ..''

திருப்பாவையில் முச்சுவையும் தித்திக்கின்ற தமிழைக் காணலாம். கோதையின் விரதத்தில் தொனிக்கும் புனிதத்தையும் கண்டு வியக்கலாம் ..

நெய் உண்ணமாட்டோம், பால் அருந்த மாட்டோம் .., கண்ணுக்கு மையிட்டு, சிகை அலங்கரித்து மலர்சூட மாட்டோம் .. தீயதை கேட்காமலிருப்போம். பிட்சை வழங்குவோம், இறைதுதி செய்வோம் என்றெல்லாம் உறுதி ஏற்கும் விரதம் இது.



இப்பாடல்களால் உண்டாகும் பயன்கள் இயற்கைக்கு உறுதுணை புரிகின்றன ..

நாடு முழுவதும் மும்மாரி பொழியும், வயல்களில் நெற்கதிர்கள் ஓங்கி வளரும், அவற்றிடையே துள்ளும் கயல்மீன்களின் அழகோ பிரமிப்பூட்டும், பசுக்கள் நிறையப் பால் சுரக்கும், எங்கும் செல்வம் கொழிப்பதற்கான வளம் தெரியும். இப்பாடல்கள் அனைத்துமே இறைவனின் பெருமையை விளக்குவதோடு, கன்னியரை சீக்கிரமே துயிலெழுந்து தொண்டாற்றத் தூண்டுகிறது.

மார்கழி மாதத்தில் அனைத்து பெருமாள் கோயில்களிலும் சுப்ரபாதத்திற்குப் பதில் திருப்பாவை பாடப்படுகிறது. மாதவனுக்கு உகந்ததான மார்கழி மாதத்தில், காலைப்பொழுதில் இது இசைக்கப்படுகிறது. வைணவ சமய வழிபாட்டில் இரண்டறக் கலந்த ஒன்றாக திருப்பாவை விளங்குவது அதிவிஷே சமானதாகும். ஏனெனில், தமிழறியா அடியார்கள் கொண்ட வைணவ தலங்களிலும் மார்கழிமாதக் காலைப்பொழுதுகளில் திருப்பாவை இசைக்கப்படுவதும், அங்கே கோதை தனக்கென்று ஒரு தனிச்சந்நிதி கொண்டுள்ளதும் வேறு எங்கும் காணக்கிடைக்காத தனிச்சிறப்பாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டாள்

பெரியாழ்வார் என்று நாமம்கொண்ட விஷ்ணு சித்தர் வாழ்ந்திருந்தார். பூப்பறித்து, மலர்மாலை தொடுத்து பெருமாளுக்கு சூட்டுவது இவரது நித்திய வேலை. தனது நந்தவனத்தில் துளசிச் செடிக்கருகில் ஒருநாள் மண்வெட்டியால் கொத்திக்கெண்டிருந்தார். அப்போது ஒரு அழகிய பெண்குழந்தை அவருக்குக் கிடைத்தது. அன்று கலி 98 வதான நள வருடம் ஆடிமாதம் சுக்ல பட்ஷ சதுர்த்தசியும், பூர நட்சத்திரமும் கூடிய நன்னாள் ஆகும்.



கொள்ளைகொள்ளும் சிரிப்புடன் தவழ்ந்த அக்குழந்தையை தனது மகளாகவே கருதினார். கோதை என்று பெயரிட்டு அளவற்ற பாசத்தோடு வளர்த்தார். 'கோதை நாச்சியார்' என்றும், 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என்றும் அழைக்கப்பட்ட ஆண்டாள் பிராட்டியே அக்குழந்தை! பூமித்தாயின் திரு அவதாரமாக கருதப்பட்டவர்.

கோதைக்கு வடபெருங்கோயிலுடையான் பெருமையையும், வைணவதர்ம சாராம்சத்தையும் சொல்லிக்கொடுத்து வளர்த்து வந்தார் விஷ்ணுசித்தர். துளசியானது இயற்கையாகவே அளவற்ற நறுமணத்தோடு இருப்பதுபோல கோதையும் பெருமாளின்மேல் பெரும் பக்தியும், காதலும் கொண்டாள்.

தன்னை பெருமாளுடன் ஒப்புவித்துக்கொள்வாள். அவர்போலவே தன்னை அலங்கரித்துக்கொள்வாள். கண்ணாடி முன்னால் நின்று தன்னையே அவராக நினைத்துக்கொள்வாள். விஷ்ணுசித்தர் பகவானுக்காக தொடுத்துவைத்திருக்கும் மாலையை தான் முதலில் அணிந்து அழகு பார்ப்பாள். தந்தைக்குத் தெரிந்தால் ஆபத்து என்பதால் அவர் வீட்டில் இல்லாத நேரத்தில் இப்படி நடப்பாள்.




ஒருநாள் விஷ்ணுசித்தர் கோதையை மாலையுடன் பார்த்துவிட்டார். இதுவரை இவள் சூடிய மாலையை பெருமானுக்குச் சாத்தினோமே .. அபசாரம் புரிந்தோமே என்று துவண்டுவிட்டார். தந்தையின் நிலையை எண்ணி கோதையும் துயரமடைந்தாள். தனது தவறை உணர்ந்தாள். அன்று ஆலயத்திற்குச் செல்லாமல் வேதனையோடு படுத்துவிட்டார் விஷ்ணுசித்தர். தொடுத்துவைத்திருந்த மாலையும் அப்படியே இருந்தது.

அன்றிரவு அவரது கனவில் எம்பெருமான் தோன்றினார். ''இன்று நீ ஏன் எனக்கு மாலை சூட்ட வரவில்லை? ''என்று கேட்டார். தனது மகள் மாலையை சூடிவிட்டதையும், வேறு மாலை தொடுத்து கொணர்வதாகவும் கூறினார் சித்தர். ஆனால் பகவானோ, ''உனது மகள் சூடிய மாலையைத்தானே இதுவரை அணிந்தேன். நீ தொடுத்ததிலும் பார்க்க அதிக நறுமணமுள்ளதாக அது இருந்ததே.. அதுதான் எனக்கு வேண்டும் ..'' என்றார். இதனால் மகிழ்ந்த விஷ்ணுசித்தர் கோதையின் தெய்வீகத்தை எண்ணி வியந்தார்.

கோதையும் சூடிக்கொடுத்த நாச்சியாராக மார்கழி நீராடி, மாதவனை எண்ணி நோன்பு நோற்று,திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய பிரபந்தங்களைப் பாடி அருளினார் ..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த ஷஷ்டியும், கார்த்திகை தீபமும்!

சூரபத்மனை அழித்தவன் முருகன்! முருகு என்ற சொல்லின் அர்த்தம் அழகு என்பதாம். அதனால் முருகனும் அழகனானான். ஆனால் வீரம் என்ற பொருளுக்கு இந்தப் பெயர் இன்னும் அதிகமாய் பொருந்துவதாக சொக்கிப் போகிறார்கள் தமிழ்ச் செல்வர்கள். சூரனை நெருங்கும்முன் அவனின் ஏகப்பட்ட வீரர்களை அழிக்கவேண்டியிருந்தது முருகனுக்கு. இந்தப் போர் ஐப்பசி வளர்பிறையில் நடந்துகொண்டிருந்தது. கடைசியில் சூரனை எதிர்கொண்டு அழித்த நாள் சஷ்டி திதியாக இருந்தது. கந்தனுக்கு உகந்தது சஷ்டி. அதாவது ஆறு. இதனால் இந்த சஷ்டி விரதமும் ஆறு நாட்களுக்கு கொண்டாடப்பட்டு வருகிறது.



## முருகன் என்றால் அழகா? வீரமா?



தீபம் என்றாலே அது வணக்கத்திற்கு உரியதே. அக்னிதேவனை வணங்குதலுக்கு வழியாகவும் தீபத்தை கருத வேண்டும். ஊரெங்கும் ஒளியேற்றும் தீபங்கள் ஒட்டுமொத்தமாகவே மனங்களிலுள்ள இருளை இந்நாளில் அகற்றுகின்றன. இதைப் புரிந்துகொண்டு இச்சந்தர்ப்பத்தில் தீப ஒளியை நம் மனங்களுக்குள் பாய்ச்ச தவறக்கூடாது. நம்மை நோக்கி வருகின்ற பண்டிகைகள் அனைத்துமே அளவற்ற புண்ணியம் நிறைந்தவை. அதிலும் இந்த கார்த்திகை தீப நிகழ்வானது ஒருபடி மேலாக கருதப்பட்டு வணங்கப்படுகின்றது. 'தீப மங்கள ஜோதி நமோ நமோ ..' என்று பாடுகிறார்கள் அல்லவா!

கார்த்திகை தினத்தை சிரத்தையுடன் அனுட்டித்தால் நெருப்பினால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் நம்மை அணுகாது. அடிமுடி காணமுடியாமல் தடுமாறிய பிரம்மாவுக்கும், விஷ்ணுவுக்கும் முன்னால் ஜோதி வடிவமாகத்தான் சிவபெருமான் உயர்ந்து நின்றார்.

ஊரெங்கும் ஏற்றப்படும் தீபச்சுடர்களில் இவ்வண்ணமே எம்பெருமான் காட்சி தருகிறார். அச்சமயத்தில் அவரைத் தரிசித்துமகிழ பஞ்ச மூர்த்திகளுமே பூவுலகம் வந்துவிடுகிறார்களாம். என்னே பாக்கியம் நமக்கு! கூடவே அவர்களின் அருளும் நம் வீட்டு முன்றலில் கிடைக்கும்போது, நாமும் ஜோதி வரிசைகளை வைத்து வழிபடும் வாய்ப்பை தவற விடலாமா?

**தெரியுமா சேதி? .. கார்த்திகை தீபதினத்தில் அத்தனை பஞ்ச மூர்த்திகளும் நம் வீட்டு முற்றத்தில் ..!!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவனுக்கு வலதுபுறம் மனைவி அமரவேண்டும் என்பது ஏன்?

கணவனின் வலது புறத்தில் மனைவி அமரவேண்டுமென்பதுதான் நியமம். வேதமுறைப் பிரகாரம் விவாக, ஐதீக காரியங்களில் இதுவே முறையாகும். ஆயினும் நான்கு சந்தர்ப்பங்களில் மனைவியானவள் கணவனுக்கு இடது புறமாக அமரலாம்.

அவை -- அபிஷேகம், அர்ச்சனை, ஆசீர்வாதம், ஊஞ்சல் என்பனவாம்.




# தெய்வீக சந்தேகங்கள்



## நிறைகுடத்து நீரை சரிப்பதில் முறைகள் உள்ளனவா?

நிச்சயமாக. ஆனால் பலரும் இதனை பின்பற்றுவதில்லை. குறிப்பாக சுவாமி வீதி உலா வரும்போது நிறைகுடத்தை பூமியில் சொரிகிறார்கள். இது மிகவும் தவறான செயலாக நோக்கப்படுகிறது. அறியாமையை வெளிப்படுத்தும் காரியம் இது என்கிறார்கள் சான்றோர்கள். நிறைகுடம் உட்பட எந்த மங்கலப்பொருட்களையும் உடனே கலைப்பது அபத்தமாகும். அது செய்யப்பட்ட நற்காரியத்தை குறைப்பதாகும். நிறைகுடம், கும்பம், பாததீர்த்தம் என்பவற்றின் வேறுபாடுகளை அறியவேண்டும். மங்கல காரியத்தின் நிறைவாக வைக்கப்பட்ட நிறைகுடத்தின் புனித நீரை வீதியில் கொட்டும்போது கால்கள் படுவதற்கு இடமுண்டு.

இறைவன் வீதியுலா சென்றுவிட்டு ஆலயம் திரும்பும்போது குரு பாததீர்த்தம் வழங்கி வரவேற்கிறார். அப்படியிருக்க வீதியுலா வரும்போது நமது இல்லத்துக்கு எழுந்தருளிய ஆண்டவனுக்கு நிறைகுடம் வைத்து நிவேதனம் செய்து அர்ச்சனை செய்தபின் பாததீர்த்தம் வழங்கி அனுப்புவது சரியல்ல என்கிறது சமய நூல்கள். ஆதலால் நிறைகுடத்து நீரை அப்படியே வைத்திருந்து பின்னர் கால் படாத இடங்களில் ஊற்றுமாறும் அந்நூல்கள் வலியுறுத்துகின்றன.



ஆலயத்திருந்து இறைவன் நம் இல்லத்துக்கு வந்தபோது ..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீமத் பகவத் கீதை

## -- பாரதியார் உரை --

தொகுத்து, தொடராக தருபவர் :
வை. திருச்செல்வம்

15

என்னைக் கருமங்கள் ஒட்டுவதில்லை. எனக்கு கர்மப்பயனில் விருப்பமில்லை. இங்ஙனம் என்னையறிவோன் கர்மங்களால் கட்டுப்படமாட்டான். -- 14

முற்காலத்தில் முக்தியை வேண்டினோரும் இயையுணர்ந்து தொழிலே செய்தனர். ஆதலால், முன்னோர்கள் முன்பு செய்தபடி, நீயும் தொழிலையே செய்யக்கடவாய். -- 15

''எது தொழில், எது தொழிலல்லாதது'' என்ற விஷயத்தில் ஞானிகளும் மயக்கமெய்துகிறார்கள். ஆதலால் உனக்குத் தொழினியல்பை உணர்த்துகிறேன். இதை அறிவதனால் தீங்கினின்றும் விடுபடுவாய். -- 16

தொழிலின் இயல்புந் தெரிய வேண்டும். தொழிற்கேட்டின் இயல்புந் தெரிய வேண்டும். தொழிலின்மையின் இயல்புந் தெரிய வேண்டும். கர்மத்தின் நடை மிகவும் சூழ்ந்தது. -- 17



செய்கையில் செயலின்மையையும், செயலின்மையில் செய்கையையும் எவன் காண்கிறானோ, அவனே மனிதரில் அறிவு டையோன். அவன் எத்தொழில் செய்கையிலும் யோகத்திலிருப்பான். -- 18




எவனுடைய செய்கைத் தொடக்கங்க ளெல்லாம் விருப்புநினைவு தவிர்ந்தனவோ, அவனுடைய செயல்கள் ஞானத் தீயால் எரிக்கப்பட்டனவாம். அவனை ஞானிகள் அறிவுடையோ னென்கிறார்கள். - 19

கர்மப் பயனிலே பற்றுக் களைந்தவனாய் எப்போதும் திருப்தியுடையோனாய் எதனிலும் சார்பற்று நிற்போன் செய்கை செய்துகொண்டிருக்கையிலும் செயலற்றவனாவான். -- 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்ப சரணம் அளிக்குமே அபயம்! ..

இது தெய்வீக சீசன் ..

சுவாமி ஐயப்பனின் புகழ்மணம் கமழும் கார்த்திகை தொடங்கிவிட்டது ..

வீதிகளும், கோயில் வளாகங்களும் அவரின் பக்தர்களின் ஆட்சிதான். அவர்களின் தனித்தோற்றத்தால் ஊரே தெய்வீகமடையும் நேரம் இது.

கடுமையான விரதத்தை மேற்கொண்ட களைப்பையும் மீறி, அதுவே ஒரு தேவாம்சத்தின் பொலிவை அவர்களின் முகத்தில் தந்துவிடுகிறது!

ஐயப்ப பக்தர்கள் மாலை அணிந்து 41 நாட்கள் மேற்கொள்ளும் இந்த விரதத்தின் சக்தி மகத்தானது. பெரும் மனவலிமையோடு ஆற்றும் தெய்வத்திற்கான தியாகத்தை இதில் காணலாம். உலகத்தோடு ஒன்றாமல் தனக்கென்றோர் உலகத்தில் ஐயப்பனுடன் வாழ்ந்து கழிக்கின்ற தவக்காலம் இது. இந்த நாட்களுக்கு இணையான வலிமையை எந்தவொரு நாளும் தராது.


சுவாமி ஐயப்பன் சின்முத்திரையோடு யோகாசன மூர்த்தியாய் சபரிமலை திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டவராவார்.

ஹரிஹர புத்திரரான அவரை சரணம் சொல்லி சரணடைந்துவிட்டால் அவரின் பக்தனுக்கு சகல சித்திகளும் கைவருகின்றன. ஏனெனில், அவர் சிவபெருமான், மகாவிஷ்ணு ஆகிய இருபெரும் சக்திகளின் அம்சமாவார்!

கஷ்டப்படாமல் எதுவும் கிடைக்காது என்பதற்கேற்ப ஐயப்ப விரதத்தை கிரமமாக அனுஷ்டித்து வந்தால், இதில் கிடைக்கின்ற பலனால் எந்த சாதனையையும் உலகில் நிகழ்த்தலாம்.



## வலிமை தரும் விரதம்!



### சில விரதநியதிகள் ..

தாய் தந்தை ஆசியுடன் ஆலயத்தில் பூசை செய்தவுடன் குருசாமி ஒருவரின் கையால் ஆலயத்தில் மாலையை அணிந்துகொள்ள வேண்டும். நீலம், கருப்பு, காவி நிறத்தில் ஆடை அணியவேண்டும். பெண்களைப் பற்றிய சபல எண்ணங்கள் வரக்கூடாது. 'சாமியே சரணம் ..' என்று சொல்லி உரையாட வேண்டும். உறங்கும்போது படுக்கை, தலையணை நீக்கி வெறும் துண்டை மட்டும் பாவிக்க வேண்டும். பாதணி, குடை முதலிய பொருட்களை தவிர்க்க வேண்டும். மரண வீடு, சடங்கு வீடுகளுக்கு செல்லக்கூடாது. சபரி மலைக்கு புறப்படும்போது 'போய் வருகிறேன் ..' என்று யாரிடமும் கூறக்கூடாது ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று பிரிவாக விளக்கீடு!

# வீட்டு விளக்கீடு, குமாராலய தீபம், சர்வாலய தீபம் ..



**விளக்கேற்றியதுதான் நாகரீகத்தின் முதலாவது வேலை!**


வீட்டு விளக்கீடு, சர்வாலய தீபம், குமாராலய தீபம் என முன்று பிரிவாக கொண்டாடுவார்கள். வீட்டிலும், வீட்டைச் சுற்றியுள்ள எல்லா இடங்களிலும் ஏற்றி வணங்கும் தீபம் வீட்டு விளக்கீடு எனப்படும். முருகன் கோவிலில் ஏற்றி வழிபடுவதும், சொக்கப்பனை கொளுத்துவதும் குமாராலய தீபம் எனப்படும். முருகன் ஆலயம் தவிர மற்ற எல்லா ஆலயங்களிலும் தீபம் ஏற்றி சொக்கப்பனை கொளுத்துதல் சர்வாலய தீபம் எனப்படும்.

அகல், எண்ணெய், திரி, சுடர் என்ற நான்கும் சேர்ந்தாலே விளக்காகிறது. இவை நான்கும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு தத்துவத்தை உணர்த்துகின்றன. மோட்ச விளக்கு ஏற்றப்படுவதன் தத்துவமும் இதுவே. இவையே சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு சாதனங்கள். அனைத்திலும் அரிதானது அறிவே. ஆதலால் அறிவொளியைத்தான் தீபஜோதியாக வழிபடுகின்றோம்.

நாகரீக வாழ்வில் அடி எடுத்துவைத்த மனிதனின் முதல்வேலை விளக்கேற்றுவதாக இருந்தது. முதலில் பனை ஓலைகளையும், மரக்கட்டைகளையும் பயன்படுத்தி எரித்து, விளக்காக உருவாக்கினான். பிறகுதான் எண்ணெயைக் கண்டுபிடித்தான். காலப்போக்கில் தனது அறிவு முதிர்ச்சியால் கற்குழியிலும், சங்கிலும், கிளிஞ்சலிலும் எண்ணெய் ஊற்றி விளக்கேற்றினான்.

ஒளி என்பது இறைவனை நாம் கண்டுகொள்வதற்கான மார்க்கம் என்பது அன்றே உணர்த்தப்பட்டுவிட்டது. பண்டைய சைவர்கள் வழிபட்ட மும்மூர்த்திகள் சூரியன், சந்திரன், நெருப்பு இவைகள்தான்.

ஒலி, ஒளி இரண்டிலும் இறைவனை வணங்குதல் முக்கியமான தத்துவமாகும். ஓம் எனும் வேதம் ஒலியாகவும், சுடர் எனும் காட்சி ஒளியாகவும் நமக்கு கிடைக்கிறது ..



அக்னி ஒன்றே பல தீபங்களாக விளங்குவதுபோல, சிவம் ஒன்றே பல மூர்த்தங்களாக விளங்குகின்றன. இராமலிங்க சுவாமிகள் 'ஒளியே சிவம் ..' என்றார். நாவுக்கரசு நாயனாரும் 'நல்லக விளக்கது நமச்சிவாயவே' என்று பாடினார்.

ஜோதி வடிவமான சிவபெருமான், தன்னை அடைந்தவர்களது அழுக்கைப் போக்கும் தீயைப்போல திகழ்கிறார். ஆன்மாக்களின் இருளை அகற்றி அக்கினி அருவமாகவும், உருவமாகவும் விளங்குவதுபோல சிவபெருமானும் அருவமாகவும், உருவமாகவும் மிளிர்கிறார்.




சிவ சோதியை யோக வழியால் காணமுடியாத மக்கள் சரியைத் தொண்டுகளால் காண முயலவேண்டும். இதனை சிவாகமங்கள் கூறுகின்றன. திருவிளக்கிடுதல் சரியைத் தொண்டுகளில் ஒன்று. நமிநந்தி அடிகள், கலிய நாயனார், கணம்புல்லர் நாயனார் என்ற அடியவர்கள் திருவிளக்கேற்றியதால் முக்திப்பேறு பெற்றவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சொக்கப்பனை

சொக்கனாகிய சிவபிரானையும், பனைமர மடலால் உருவாக்குவதையும் குறிக்கின்ற வார்த்தை சொக்கப்பனை என்றாகிறது. சுஷ்கப் பனை எனும் சொல்லும் சொக்கப்பனையாக வழக்கத்திற்கு வந்தது என்றும் சொல்கிறார்கள்.

இலக்கணத்தில் பனை மட்டையைக் குறிக்கும் செய்யுள் அடியொன்று வருகிறது.

'சு.ஃ.றென்னும் தண்ணீடேட்டுப்பனை' என்பதே அது. இந்த ஒலிக்கும், சொக்கப்பனைக்கும் சம்பந்தம் இருக்கும் என்று யூகிக்க இடமுண்டு.

மடமான இருளை அகற்றும்வரை, சிவமான பொருள் தெரிந்திலது. இதனை விளக்கேற்றிப் பார்த்துணர்தல் வேண்டும். வீடாக உடம்பும், தகளியாக உள்ளமும், நெய்யாக உணர்வும், பொருளாக சிவமும் இருப்பது அப்போது தெரியும். மடம்பரும் உணர்வு பசுஞானம். மடம்படும் உணர்வு சிவஞானம்.

அக்கினிக்கு இருக்கின்ற ஸ்தானம் மிகப் பெரியது. தேவேந்திரனுக்கு அடுத்தபடியான இடத்தை அது வகிப்பதாக இருக்குவேதம் பகர்கிறது. இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையில் ஒரு தூதுவனாக அக்கினி வர்ணிக்கப்படுகின்றது. மனித வாழ்க்கையில் நாகரீகம் தலைகாட்டியதே தீபமேற்றும் பழக்கத்திற்குப் பின்னர்தான்.

எனவே, இந்த யுகத்தை தீபயுகம் என்றுகூட அழைப்பார்கள். தங்கத்திலான விளக்குகளை ஏற்றும் வழக்கம்கூட இராமயண, மகாபாரத காவியங்களில் காணக் கிடைக்கின்றன ..

01 -- கணம்புல்லர்


02 -- மெய்ப்பொருளார்

03 -- ஆனாயர்

04 -- மூர்க்கர்

05 -- சிறப்புலியார்

06 -- ஆறுமுகநாவலர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்ம சாஸ்திரம் -- 10 --



**சன்னியாசி, வைத்தியன், ஜோதிடன், குரு, கர்ப்பிணி, நோயாளி ஆகிய இவர்களுக்கு ஆபத்துக் காலத்தில் செய்யும் உதவியால் வரும் புண்ணியம் உயர்ந்தது.**

சுமார் 20 பேர்கள் புசிக்கத்தக்கதான ஓர் விஷேச காரியத்தை வீட்டில் நடத்துகிறவன் தன் வீட்டிற்கு இடது, வலது புறமுள்ள 5 வீட்டாரை அழைத்து நடத்த வேண்டும்.

வீட்டில் எந்த விஷேசம் செய்தாலும் இடது புறமுள்ள வீட்டிலும், வலது புறமுள்ள வீட்டிலும் உள்ளவர்களை அழைத்து உணவு கொடுக்காமல் செய்கிற காரியம் நெய்யில்லாமல் ஓமம் செய்த அக்னி போலாகும். இன்னும் சொல்வதானால், இடதுபுறம் 4 வீட்டுக்காரர், வலதுபுறம் 4 வீட்டுக்காரர், எதிர்பக்கம் 4 வீட்டுக்காரர்களை கட்டாயம் அழைக்க வேண்டும்.



தனது வீடுதேடி எந்த காரியமாக ஒரு சுமங்கலி வந்தாலும் அவளை வரவேற்று உபசரித்து அன்னமளிக்க வேண்டியது முக்கியம்.

அது முடியாமல் போனால் ஒரு டம்ளர் தண்ணீராவது அருந்தச்செய்து மஞ்சள், குங்குமம், புஷ்பம் கொடுக்க வேண்டும். இதனால் கொடுப்பவர்களுக்கு மாங்கல்ய பலமும், வாங்கியவளுக்கு ஐஸ்வர்ய பலமும் தானாக உண்டாகிறது.

தாய் மறைந்தால் வாய்க்கு ருசி நட்டம். பிதா மறைந்தால் கல்வி நட்டம். சகோதரன் மறைந்தால் தன் உடலில் பாதி நட்டம். தன் மனைவி மறைந்தால் சகலமும் நட்டம்.

பெண்களின் முகம், காக்கை கிளி போன்ற பறவைகளால் கொத்தித்தள்ளப்பட்ட பழவகை, மாட்டின் மடி, சிறு குழந்தைகளின் வாய் இவைகளுக்கு அசுத்தமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்களில் பக்தியோடு கட்டும் புஷ்பமும், விறபனைக்காக கடைகளில் அடுக்கி வைத்திருக்கும் சரக்குகளும், மழைநீரால் மட்டும் நிரம்பிய தெப்பக்குளத்தின் தண்ணீரும் எப்போதும் சுத்தமானவை.

கற்றவரின் அறிவுத்திறமையை கற்றவர்களால்தான் அறிய முடியும். மற்றவர்களால் முடிவதரிது. இது எது போலென்றால் மலட்டுப்பசு பிரசவ வேதனையை அறிய மாட்டாது போல்.



மனைவியானவள் குடும்ப காரியத்தில் பணியாள் ஆவாள். புருஷனுக்கு புத்தி கூறும்போது மதியூகமுள்ள மந்திரி. பார்வையில் மகாலட்சுமி. கணவனின் தேவைகளை அறிந்து செய்யும்போது மாதா. பொறுமையாக இருக்கையில் பூமிதேவி. சயனத்தில் தாசி ஆகிய இத்தகைய குணமுள்ளவளே சிறந்த பதிவிரதை ஆவாள்.

பசுவை வீணாகக் கொல்பவன் அப்பசுவுக்கு எத்தனை ரோமங்கள் இருக்கிறதோ அத்தனை ஜென்மங்கள் பசுவாகப் பிறந்து பிறரால் கொல்லப்படுவான். பசுவைக் காப்பாற்றி பேணுவதால் கிடைக்கும் புண்ணியத்தின் தன்மைக்கு அளவேயில்லை.

பசுவானது தன் கன்றுக்குட்டிக்கு பால் கொடுக்கும் சமயத்திலும், தண்ணீர் குடிக்கும் சமயத்திலும் நாம் தடை செய்யக்கூடாது.



தனது குருவைக் கண்டவுடன் வணங்க வேண்டும். தனக்கு உதவி செய்தவனையும், நண்பனையும், நால்வருக்கு தெரிய சபையில் வணங்க வேண்டும். தாசானு தாசர்களை காரியம் கைகொள்ளும்போது வணங்க வேண்டும். மனைவி காலமான பின் அவளை வணங்க வேண்டும். பிள்ளைகளை ஒருபோதும் வணங்கக்கூடாது. ஜோதிடர்களை எப்போழுதும் வணங்க வேண்டும்.

.. இன்னும் இருக்கிறது

நன்றி : தர்மசாஸ்திரம் நூல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நலம் தரும் யோகா

ஆரோக்கிய வாழ்வு

தொடர் -- 15


## 30 -- நௌலி


**செய்யும் முறை : --**

கைகளை துடையின் மீது வைத்து உடலை சற்று வளைத்து நின்று முழுக்காற்றையும் வெளியே விடவும். இந்த நிலையில் வயிற்றை எக்கி உள்ளே இழுக்கவும். இப்படி இருப்பது உட்டியாணா ஆசனம். இதை சில காலங்களுக்கு செய்து சிறு அளவு காற்றை உள் எடுக்க வயிற்றுப் பகுதி திரண்டு வரும். இதுவே நௌலி எனப்படும். சிறிது நாட்கள் செல்ல வலது கைப்பக்கமும், இடது கைப்பக்கமும் திரண்டுள்ள பகுதியை அசைக்கலாம். இதை முறையே வாமன நௌவி தெட்சண நௌலி என்பர்.

**பயன்கள் : --**

இந்த ஆசனம் செய்து வந்தால் வயிற்றில் உள்ள கிருமிகள் ஒழியும். விந்து கெட்டிபடும். விந்து கசிவோருக்கு அது தடுக்கப்படும். மலச்சிக்கல் தீரும். மனக்கட்டுப்பாடு ஏற்படும். உடலில் தேஜஸ் உண்டாகி, புத்துணர்ச்சி பெருகும். குண்டலினி சக்தியை தட்டியெழுப்ப ஒரு சிறந்த ஆசனம் இதுவாகும். வயிற்றுக்கோளாறுகளும் நீங்கும்.





## 31 -- சக்கராசனம்

**செய்யும் முறை : --**

ஆரம்பத்தில் பிறை ஆசனம் செய்து வந்தவர்கள் இதனை இலகுவாக செய்யலாம். முதலில் மல்லாந்து படுத்து கைகளை தலைக்கருகில் தள்ளி வசதியாக வைத்து, கால்களையும் இடைவெளியாக விரித்து வைத்துக்கொள்ள வேண்டும். பின்னர் இடுப்புப்பகுதியை மேல் நோக்கி உயர்த்தி நிமிர்த்த வேண்டும். அப்போது உடம்பு ஒரு வண்டிச்சில்லு போல வட்டமாக வரும். இதனால்தான் இதை சக்கராசனம் என்றார்கள்.

**பயன்கள் : --**

முள்ளம் தண்டு முழுமையாக வளைக்கப்படுவதால் அதனுடன் சம்பந்தப்பட்ட அத்தனை நரம்புகளும் புது இரத்தம் பாய்ச்சப்படுகிறது. உடல் புத்துணர்ச்சி ஏற்பட்டு சுறுசுறுப்பாக இயங்குகிறது. இதனால் இள்மைப்பொலிவு ஏற்படுகிறது. நுரையீரல், சுவாசப்பை என்பன பலம் பெறுகிறது.


நன்றி :
அஷ்டாங்க யோகி
நா. குலசிங்கம் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்துமகள் வீடெல்லாம்..

## மார்கழி கோலங்கள் ..



**மனதை ஒரு முகப்படுத்தி கோலமிடும் பெண்கள் அழகும், மெல்லிடையும் பெறுவது மட்டுமல்ல-- வறுமையோ வசதியோ, தமது இல்லத்தை தெய்வீகமாக்கி விடுகிறார்கள்.**


**எங்கே, அழகுறு கோலங்களால் இந்த விரத நாட்கள் ஒளி பெறட்டும் !..**

மிக மிக எளிதான கோலங்கள் இவை .. நினைத்த மாத்திரத்தில் சில நிமிடங்களிலேயே போட்டுவிடலாம். விரத நாட்கள், பண்டிகை நாட்களுக்கென்று உருவானவை.

தவிர, வெள்ளி செவ்வாய் போன்ற தூய்மையான நாட்களிலும் இக்கோலங்கள் எல்லையற்ற மங்கலத்தை இல்லங்களில் நிறைக்கக்கூடியவை. நமது மங்கையர்கள் கோலத்தை நினைத்து பிரமிப்பதை முதலில் விடவேண்டும் என்கிறது கோல சாஸ்திரப் புத்தகம். ஆர்வத்தோடு கைகளுக்குபயிற்சி கொடுத்தால், சில நிமிட வேலைதான்!

பயிற்சியில் வந்ததும், நாளுக்கொரு கோலம் நீங்கள் வாசலில் இடுவதை நீங்களே தடுக்க முடியாது. அதுதான் ஆயிரக்கணக்கில் இருக்கிறதே!


''அமைதியின் தேவை உலகத்திற்கு இல்லை -- அது மக்களுக்குத் தேவையானது. உலகில் உள்ள மக்கள் உள் அமைதியில் இருக்கும் பொழுது உலகமும் அமைதியில் இருக்கும் .. ''




**அமைதியின் சொற்கள் பிரதி புதன் கிழமைகளில் ..**
**மாலை 3.55 முதல் 4.25 வரை ஸ்வர்ணவாஹினியில்!**
**விபரங்களுக்கு : 0117250001, 0112713930 -- www.wopg.org**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காரியம் முடிந்தால், நடையைக் கட்டுவதா?



**கற்றுத்தருகின்ற கடைசிப்பக்கம்! ..**



பயணம் முடிந்தால் போதும். அப்புறம் நீயாரோ, நான் யாரோ என்று வாழ்பவர்களுக்கு

ராமாயணத்திருந்து ஒரு செய்தி --

ராமர் யுத்தத்தை முடித்துவிட்டார். இராவணன் தொல்லை இனி இல்லை. சீதாப்பிராட்டியையும் மீட்டாயிற்று. இலங்கையிலிருந்து புறப்படுவதற்காக எல்லோரும் ராமரின் உத்தரவுக்காக ஆவலோடு காத்துக்கொண்டிருந்தனர். அயோத்தி செல்லவும், அங்கே ராமரின் பட்டாபிஷேகத்தைக் காணவும் வானர வீரர்களுக்கு ஆவலும். அவசரமுமாய் இருந்தது. கானகமும், மலைகளுமே கதியென்று கிடந்த அவர்களுக்கு நாடு நகரங்களையும், மாட மாளிகைகளையும் காண ஆசை இருக்காதா! ..

அனைவரும் வெற்றிக்களிப்பில் அயோத்தி செல்லும் ஏற்பாட்டில் இருக்க, ஸ்ரீராமர் மட்டும் முகத்தில் துன்பரேகை படர அமர்ந்திருந்தார். அருகே நின்ற விபீஷணன், சுக்ரீவன், ஜாம்பவான் முதலியோருக்கும் புரியவில்லை.

தனது வாக்குறுதியை நம்பி, தம்பி பரதன் காத்திருக்கும் கடைசி நிமிடங்கள் இவை. சற்று தாமதித்தாலும் தீக்குளித்து விடுவான். உடனேயே இலங்கையிலிருந்து போய்ச் சேர்வதென்பதும் சாத்தியமில்லை.

பெருமானை வாட்டும் துன்பம் இதுதானென்பது ஏறக்குறைய எல்லோருக்கும் தெரியும்தான். ஆனால் அவர் இன்னொரு விஷயத்தில் துன்பமுறுவதை அறிய ஒருவருக்கும் வாய்ப்பில்லை ..

மௌனம் கலைந்தார் ராமபிரான் --

''ஆஞ்சநேயா, எனக்கொரு உதவி செய்வாயா? ..''

வணங்கி நின்று செவிமடுத்தார் அனுமன். தனது பிரபு கேட்கப்போவதை ஓரளவு ஊகித்திருந்தார். தான் வரும் சேதியை முன்கூட்டியே புறப்பட்டுச்சென்று பரதனுக்கு அறிவித்து, அவனது தீக்குளிப்பை தடுத்து நிறுத்தும்படி கூறப்போகிறார் ஐயன்.

'இதற்கேன் இத்தனை தாமதம் காட்ட வேண்டும்! தயங்க வேண்டும்!!' என்று மயங்கினார் மாருதி.

வான்மார்க்கமாக பறந்து சென்று நொடிப்பொழுதில் பரதனைச் சந்திப்பது பெரிய வேலையா சொல்லின் செல்வருக்கு?

''கட்டளையிடுங்கள் பிரபு! இப்போதே பரதரை சந்திக்க புறப்படட்டுமா.'. '' என்றார்.

''ஆமாம் மாருதி, ஆனால் வழியில் உனக்கு இன்னுமொரு வேலையை தருவதற்கே தயங்குகிறேன் .., அதாவது நீ போகும் வழியில் கங்கையை ஓட்டி சிருங்கிபேரம் என்ற ஊர் வரும். அங்கே என் இன்னொரு தம்பி இருக்கிறான். குகனென்று பெயர். அவனும் பரதனைப்போலவே என்வரவை எதிர்பார்த்து உண்ணாமல் உறங்காமல் இருப்பான். நீ அந்த இடத்தில் இறங்கக்கூட வேண்டாம் .., பறந்தவாறே அவனிடம் 'அண்ணன் ராமன் வந்துகொண்டிருக்கிறான் ' என்று சொல்லிவிடு, அது போதும் '' என்றார்.

சொல்லொணா இன்பத்தில் விண்ணில் பாய்ந்து சென்றார் அஞ்சனை மைந்தர்.

'இந்த நேரத்தில் இது தேவைதானா ..' என்று அனுமனும் சலிக்கவில்லை.

'காரியம் முடிந்தது, இனி நடையைக் கட்டவேண்டியதுதான்.. ' என்று ராமரும் நினைக்கவில்லை.

இதுதான் நமக்கும், அவங்களுக்கும் உள்ள வித்தியாசம் ..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயன்மார் வாழ்வில்..


புராண அறிவு !
பாலர் வகுப்புகளில் ..



ஞானசம்பந்தர் தருமபுரம் சென்றபோது அங்கே திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஓடோடி வந்து சம்பந்தரை வணங்கி வரவேற்று, அவருடன் சேர்ந்து பதிகம் பாடுகிறார்.

## திருஞான சம்பந்தர் சரிதத்தில் வரும் நிகழ்வுகள் ...

அப்பர் பெருமானோடு இணைந்து சிவத்தலங்களை நோக்கி யாத்திரை புரிந்தார் சம்பந்தர். ஒரு இடத்தில் பன்னெடுங்காலமாக மூடிக்கிடந்த சிவாலயத்தை பதிகம் பாடி இருவரும் திறந்து வைத்து இறைவனை மக்கள் தரிசிக்கும்படி செய்தார்கள் ..



**‘ பக்தி விஜய ’ த்தில**
**எல்லாம் கிடக்கு புள்ள !**
**நல்ல புத்தகம். விசயங்கள்**
**வலு சுகமா விளங்குது ..**



**வாசிப்பு இன்பத்தில் திளைப்பீர், ஆன்ம பலத்தில் வாழ்வீர்! ..**

( இதுவரை பதிவு செய்யாத வாசகர்கள் சந்தாதாரர் ஆகி, இப்பணிக்கு ஒத்துழைக்குமாறு தயவாக வேண்டுகிறோம் ..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ' பக்தி விஜயம்.. ' எங்கும், எல்லோர் வாழ்விலும் ..
































## மாதாந்த மலர்கள் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org